கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

01.02.2015 - (01 மாசி, 2015 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 05, கதிர் - 105 16 பக்கங்கள் ரூபா: 25.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /22 / NEWS / 2015

# ஞான ஒளி

GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05




## சுதந்திர தின வாழ்த்துக்கள்

04 . 02 . 2015

**ஜனநாயக குடியரசு நாடாம் எமது இலங்கை திருநாடு 67வது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறது. எமது நாட்டு மக்கள், நீதியில் சுதந்திர காற்றை சுவாசிக்கவும், உண்மை, சமுதாயம் உருவாகவும், இறைநீதியில் வழிநடத்தப்படவும் வேண்டுவோம்.**


| பக்கம் 05 | பக்கம் 09 | பக்கம் 13 |
| --- | --- | --- |
| அவர் வருவாரா...? | திருச்சபையின் புனிதரா...? | திருச்சபையில் கிறிஸ்தவ ஒன்றிப்பு |








# "கிறிஸ்தவ ஒன்றிப்பு என்பது வெறுமனே கலந்துரையாடலில் அல்ல, மாறாக மூவொரு இறைவனால் வெளிப்படுத்தப்பட்டதை பகிர்ந்து கொள்வதற்கே..."

கடந்த மாதம் 18ம் திகதி முதல் 25ஆம் திகதி வரை உலக கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம் கடைப்பிடிக்கப்பட்டது. 25ம் திகதி வாரத்தின் இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமையன்று திருத்தந்தை உரோம் புனித பவுல் பசிலிக்காவில் திருவழிபாட்டை தலைமையேற்று நடத்தினார். அன்றைய நிகழ்வில் திருத்தந்தை.... இக்காலத்தில் கிறிஸ்தவர்கள் என்பதற்காகவே எல்லா கிறிஸ்தவ சபைகளை சார்ந்தவர்களில் பலர் துன்புறுத்தப்பட்டு கொல்லப்படுகின்றார்கள். இதுவே இந்நாளில் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து வெளிப்படும் இரத்த கிறிஸ்தவ ஒன்றிப்பு என்று கூறினார். கிறிஸ்தவ ஒன்றிப்பு என்பது இது குறித்த கலந்துரையாடல்களில் ஈடுபடும் ஒவ்வொரு குழுவும், தமது கருத்து ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முயற்சிக்கும் நுட்பமான கொள்கை முறை உரையாடல்களின் பலன்களால் வருவது அல்ல மாறாக, நம்மை ஒன்றிணைப்பது எது என்பதை அதிகமாகவும், முழுமையாகவும் புரிந்து கொள்வதற்கு வழிகளைத் தேடுவதாகும். தந்தையாகிய கடவுளின் அன்பு, தமது மகன் மூலம் தூய ஆவியார் வழியாக வெளிப்படுத்தப்பட்டதை ...

**தொடர்ச்சி 15ம் பக்கம்**




**மனமாற்றத்திற்கான இறை இரக்கத்தின் காலம்**

இவ்வருட தவக்காலம் இம்மாதம் 18ஆம் திகதி புதன்கிழமை விபூதிப் புதனோடு ஆரம்பமாகிறது.

02.04.2015 பெரிய வியாழன்
03.04.2015 பெரிய வெள்ளி
05.04.2015இயேசுவின் உயிர்ப்பு ஞாயிறு

**தவக்காலம் உடலை வருத்த அல்ல உள்ளத்தை திருத்த...**

## கௌரவ திரு ஜோன் அமரதுங்க அவர்கள் தன்னுடைய பணியை அதிகாரப் பூர்வமாக ஆரம்பித்தார்



கிறிஸ்தவ, மத அலுவல்கள் அமைச்சு மற்றும் பொதுமக்கள் சமாதான அமைச்சராக தெரிவாகியுள்ள கௌரவ திரு ஜோன் அமரதுங்க தன்னுடைய கிறிஸ்தவ அலுவலக அமைச்சுப் பணியை கடந்த மாதம் 26.01.2015 அன்று திங்கட்கிழமை காலையில், கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் இல்ல கேட்போர் கூடத்தில் வைத்து அதிகாரப்பூர்வமாக ஆரம்பித்தார். இந்நிகழ்வில் கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் ஆயர்கள், குருக்கள், பலரும் கூடியிருந்தனர். பொறுப்பேற்ற பின்னர் அமைச்சரை கர்தினால் வாழ்த்துவதை படத்தில் காணலாம்.

**தகவல் : நிமால் பெரேரா**

## இலங்கை அன்னையின் திருவிழா

**08 . 02 . 2015**



தேவத்தை பெசிலிக்காவின் வருடாந்த திருவிழா 08.02.2015 அன்று ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுகின்றது. அன்றைய தினம் திருநாள் சிறப்புத் திருப்பலி காலை 7.30 மணிக்கு கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையின் தலைமையில் நடைபெறும். நண்பகல் 12.15 மணிக்கு தமிழ் மொழியில் திருப்பலி நடைபெறும்.




**உங்கள் இதயத்தைக் கடினப்படுத்தாதீர். ஆண்டவர் குரலுக்கு செவி சாய்ப்பீர் (திபா 95)**

# அருளாளர் யோசப்வாஸ் இறையியல் கல்வியக வருடாந்த ஒன்றுகூடல்

"நாம் அனைவரும் திருமுழுக்கினால் நற்செய்திப் பணியாற்ற கடமைப்பட்டுள்ளோம்" (1 கொரி 9:16)

இறைவனைப் பற்றி அறிகின்ற இறையியல் கற்கை நெறியைத் தொடரும் மாணவர்கள் என்ற வகையில் 22.12.2014ம் திகதி தெமட்டக்கொட புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒரே சமூகமாக ஒன்று கூடினோம். இவ் ஒன்றுகூடலில் 1ம் வருட, 2ம் வருட, மாணவர்கள் உட்பட இவ்வருடம் இறையியல் இளமாணிப் பட்டப்படிப்பை பூர்த்தி செய்து, பெறுபேறுகளுக்காகக் காத்திருக்கும் மாணவர்களும் கலந்து கொண்டனர். நத்தார் ஒன்றுகூடலின் முதல் நிகழ்வாக இறைவன் இவ்வருடம் முழுவதும் எமக்களித்த அருட்கொடைகளுக்காக நன்றி கூறும் திருப்பலியை கல்வியக இயக்குனர் அருட்பணி றெஜினோல்ட் லூசியன் (அ.ம.தி) தலைமையில் அருட்பணி இக்னேஷியஸ் வர்ணகுலசிங்கம், அருட்பணி பிறிட்டோ (அ.ம.தி) ஆகியோர் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். இன்னிசைப்பாடல்களோடு எம் நன்றியறிதலை மாணவர் ஆசிரியர் சமூகமாக இறைவனுக்கு ஒப்புக்கொடுத்தோம்.

திருப்பலியினை தொடர்ந்து அதிதிகள், விரிவுரையாளர்கள் விழா மேடைக்கு அழைத்து வரப்பட்டனர். தமிழ் கலாச்சாரத்தோடு ஒன்றிணைந்த வகையில் ஆராத்தி எடுத்து மங்களத் திலகமிட்டு அதிதிகள் வரவேற்கப்பட்டனர். பின்னர் நிகழ்வினை விரிவுரையாளர்களிடம் ஒப்படைத்தோம் எமது அருட்தந்தையர்களுக்கிடையில் பாடல் போட்டி ஒன்றும் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய இனியதோர் வாய்ப்பை எமக்குத் தந்த இறைதந்தை, தம் மகன் இயேசுவின் கட்டளையை (மத் 28:20) நிறைவேற்ற எம்மையும் பொதுநிலையினராக அழைத்துள்ளார். இறையியல் கற்கை என்பது எம்மை இறைவனிடம் அழைத்துச் செல்வதோடு பிறரையும் இறைவன் பால் கொண்டு வந்து சேர்க்க உந்து சக்தியாய் அமைகிறது. இறைவனோடு நெருங்கிய உறவு கொள்ள அவ்வுறவில் நிலைத்து வாழ உதவுகிறது. இறையியல் மாணவர்கள் என்ற ரீதியில் ஏராளமான அருட்கொடைகள் எம் வாழ்விற்கு கிடைக்கப்பெற்றன. தூய ஆவியானவரின் விசுவாசம், அன்பு, எதிர்நோக்கு, (bible) reference மட்டுமன்று மகிழ்ச்சி, பகிர்வு, விட்டுக்கொடுப்பு, உதவும் மனப்பான்மை போன்றவற்றையும் எமக்குள் உள்வாங்கிக் கொண்டோம். மதிய உணவுடன் எமது நிகழ்வுகள் நிறைவெய்தின.

தகவல் எஸ். விஜயராஜ்

# பெற்றோருக்கு

க.பொ.த சாதாரண தரம் 10,11ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கான மாதாந்த செயலமர்வும், கருத்தரங்கும் இம்மாதம் 03ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது

ஏற்பாட்டாளர்கள்
பேராயர் பொஞ்சின் கல்வி நிறுவகம்

**தொடர்புகளுக்கு**
**அருட்தந்தை உதயதாஸ் அடிகளார்.**
**0777448775**

# வேதாக பாடநெறி மற்றும் பயிற்சிப் பாசறை

### இளைஞர் யுவதிகளுக்கான எளிய முறையிலான வேதாகம பாட நெறி

இளைஞர் யுவதிகளுக்கான ஒவ்வொரு திங்கட்கிழமையும், மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 8.00 மணிவரை தொடர்ச்சியாக 10 வாரங்களுக்கு கொழும்பு கிரான்பாஸ் புனித சூசையப்பர் ஆலய பங்கு மண்டபத்தில் நடைபெறும்.

### 10, 11ஆம் ஆண்டு மாணவர்களுக்கான பயிற்சிப் பாசறை

இம்மாதம் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தரம் 10, 11ஆம் ஆண்டு மாணவர்களுக்கான (ஆண்கள்) தலைமைத்துவப் பயிற்சி பாசறை காலை 9.00 மணி தொடக்கம் 12 மணிவரை கொழும்பு கிரான்பாஸ் புனித சூசையப்பர் ஆலய மண்டபத்தில் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தகவல் : வட கொழும்பு இளைஞர் பணியகப் பொறுப்பாளர், அருட்தந்தை ஒனாசியஸ் பர்னாந்து**

# திரு இருதய சபையின் ஆண்டு விழா

கொழும்பு வடக்கு, கிரான்பாஸ் பங்கின் திரு இருதய சபையினரால், தமது 65ஆம் வருட ஆண்டுவிழா, 08.02.15 திங்களன்று புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது.

இச்சபை, 1950ஆம் ஆண்டு மாசி மாதம் 02ஆம் திகதி வியாழன் அன்று இரவு 7.00 மணிக்கு கிரான்பாஸ் புனித சூசையப்பர் ஆலயத்தில், இதன் ஆரம்பகர்த்தாவான திரு. வி. சவரிமுத்து, திரு. மீ. யாகப்பன், மற்றும் திரு. ச. கப்ரியேல் ஆகியோரினால் ஆரம்பிக்கப்பட்டு, பங்கின் தமிழ் பேசும் மக்களுக்காக அருட்தந்தை டொமினிக் ஆனந்தப்பா அடிகளாரினால் ஸ்தாபிக்கப்பட்டது.

இக்காலகட்டத்தில் திரு. வி. சவரிமுத்து அவர்களின் தலைமையின் கீழ் 150க்கும் மேற்பட்ட அங்கத்தினரைக் கொண்ட ஒரு பக்தி சபையாக இயங்கிக் கொண்டிருந்தது.இத்தருணத்தில் 30 அங்கத்தவர்களைக் கொண்டு பங்கு மட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்த திரு இருதய சபையினர் ஒன்று கூடி ஒரு முடிவை எடுக்க தனித் தமிழில், வடகொழும்பு திரு இருதய சபை என மாற்றம் பெற, அருட்தந்தை ஆனந்தன் பெர்னான்டோபுள்ளே அடிகளார் உறுதுணையாக இருந்தார்.

தொடர்ச்சி 15ம் பக்கம்

# அன்புடன்



## வரவேற்கின்றோம்
## வாழ்த்துகின்றோம்

யாழ் மறைமாவட்ட வவுனியாவிலிருந்து இரத்தினப்புரி மறைமாவட்டத்துக்குச் சொந்தமான பலாங்கொடை பங்கிற்கு புதிதாக வருகை தந்துள்ள அருட்பணி ஞானரூபன் (திருச்செபமாலை சபை) அடிகளாரை அன்புடன் வரவேற்கின்றோம். அருட்பணி. ஞான ரூபன் அடிகளார் இரத்தினப்புரி மறைமாவட்டத்தில் இருந்து கொண்டே கொழும்பு உயர் மறைமாவட்டத்துக்கும் சென்று பல பங்குகளில் பணி புரிந்து வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும். தொடர்ந்தும் அடிகளாரின் பணி சிறக்க வேண்டுகின்றோம்.

# கொழும்பு உயர் மறைமாவட்ட வெளிக்கன்ன - வகை தோட்டத்தைச் சேர்ந்த புனித திரேசம்மாளின் வருடாந்த விழா



கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்குச் சொந்தமான வெளிக்கன்ன பங்கின் - வருகை (wagga) தோட்டத்தில் அமைந்திருக்கும் புனித சின்ன திரேசம்மாளின் ஆலய வருடாந்த விழாவையொட்டி 05.12.2014 அன்று பங்கு அருட்பணி. சஞ்சீவ அடிகளாரின் தலைமையில் கொடியேற்றத்துடன் சனிக்கிழமை மாலை ஆராதனையும் திருநாள் திருப்பலியையும் இரத்தினப்புரி மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. ஞானரூபன் அடிகளார் கிளமன்ட் சஞ்சீவ அடிகளார் உதவி அருட்பணி. கிளமன்ட் சஞ்சீவ மூவரும் இணைந்து திருநாள் திருப்பலியை நிறைவேற்றினார்கள். அன்றைய தினம் திருப்பலியின் நிறைவில் புனித சின்ன திரேசம்மாளின் திருச்சுருபத்தை பங்கு மக்கள் கையிலேந்தி பவனியாக வருவதையும் படத்தில் காணலாம்

**தகவல் : மேரி இருதயநாதன்**
**பேராலயம் [மறையாசிரியர்]**
**இரத்தினப்புரி**

# புனித யோசப்வாஸின் திருவிழாவில் நாட்டின் நல்லாட்சிக்காக பிரார்த்தனை

இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் முதல் புனிதராக பரிசுத்த பாப்பரசரால் கடந்த 14ம் திகதி திருநிலைப்படுத்தப்பட்ட புனித யோசப்வாஸின் முதல் திருவிழாவான வெள்ளிக்கிழமையன்று இலங்கையிலுள்ள கத்தோலிக்க தேவாலயங்களில் விசேட திருவிழா திருப்பலி இடம்பெற்றது. திருவிழா திருப்பலியை எட்டியாந்தோட்டை புனித மரியாள் தேவாலயத்தின் பங்கு குரு அருட்தந்தை. ரொயிஸ்டன் பேர்னான்டோபுள்ளே தலைமையில் அருட்தந்தையர்களான அந்தனி பேர்னாண்டோ அடிகளாரும், ரொபட் ஜேக்கப் அடிகளாரும் நடாத்தினர். பிரார்த்தனையை கேகாலை மாவட்ட மரியாயின் சேனை இணைப்பாளர் எஸ்.பி.அந்தோனிமுத்து வழிநடத்தினார். தமிழ், சிங்கள மொழிகளில் இடம்பெற்ற இத்திருவிழா திருப்பலியுடன் இணைந்ததாக புனித யோசப் வாஸின் வாழ்க்கை வரலாறின் குறுந்திரைப்படம் காண்பிக்கப்பட்டதுடன், ஆசீர்வாதத்துடன் அன்னதானமும் வழங்கப்பட்டது. பங்கு தந்தை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வு மரியாயின் சேனையினர் பங்கு மக்களது பங்களிப்புடன் ஒழுங்குபடுத்தியிருந்தனர். இவ்வாறான திருவிழா திருப்பலி கண்டி, அம்பிட்டிய தேசிய குருமடத்திலுள்ள புனித யோசப்வாஸ் திருத்தலத்திலும் நடைபெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**தகவல் :**
**எஸ்.பி.அந்தோனிமுத்து இணைப்பாளர்**
**மரியாயின் சேனை, கேகாலை மாவட்டம்**

# குர்சில்லோ இயக்கத்தின் வருடாந்த மாநாடு

இலங்கை குர்சில்லோ இயக்கத்தின் மறை மாவட்டங்களுக்கான செயலகம் குர்சில்லோ அங்கத்தினர் அனைவரையும் ஜெயத்துடன் 2015ஆம் ஆண்டு மாசி மாதம் 01ஆம் திகதி ஞாயிறு காலை 8.00 மணி முதல் புனித பேதுரு கல்லூரி, கொழும்பு 04இல் நடைபெறும் 48வது வருடாந்த மாநாட்டிற்கு அன்புடன் அழைக்கின்றனர்.

**மாநாட்டின் கருப்பொருள் :** அன்பின் பணிப்பாளராயிருக்க ஓர் அழைப்பு (யோவா 15:12)

**கவனிக்கவும் :** 3 நாள் குர்சில்லோ நிகழ்ச்சியில் பங்குபற்றியவர்கள் மாத்திரமே இம்மாநாட்டில் பங்குகொள்ள முடியும்.

அருட்தந்தை ரோனி மார்ட்டீன் அடிகளார், மறைமாவட்டங்களுக்கான செயலக ஆன்மீக இயக்குனர்.

# தனியார் கல்வியக வகுப்புகளினால் கத்தோலிக்க திருமறைச் செயற்பாடுகள் பாதிப்பு

[ சிரேஷ்ட உபஅதிபர் M.S.A ஒஸ்வேல்ட் ]

கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையின் தலைமையில் அருட்பணி உதயதாயஸ் அடிகளாரின் ஏற்பாட்டில் கிரான்பாஸ் புனித சூசையப்பர் ஆலய பங்கு மண்டபத்தில் நடைபெற்ற கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வில் சுமார் 100 ஆசிரியர்கள் பங்குபற்றினர். இந்நிகழ்வில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

தற்கால பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை கற்றல் செயற்பாடுகளுக்காக முழுமையாக தனியார் கல்வி நிலையங்களை நம்பி வாழுகின்றனர். காலை 6.30க்குப் பிள்ளைகளை அழைத்துச் சென்று மாலை 8.30 மணிக்குத்தான் வீடுகளை சென்றடைகின்றனர். சமயச் செயற்பாடுகளுக்கோ விளையாட்டுச் செயற்பா டுகளுக்கோ நேரம் ஒதுக்கிக் கொடுப்பதில்லை. "படி படி ஓடு ஓடு" என்று பிரத்தியேக வகுப்புகளில் மாணவர்களின் கவனத்தை திசைதிருப்புகின்றனர். தனியார் கல்வி நிலையங்கள் கிழமை நாட்களின் மாலை வகுப்புக்களையும், விடுமுறை நாட்களில் காலை 6.30 மணி தொடக்கம் மாலை 8.30 மணி வரையும் நிதியை எதிர்பார்த்து சமய மக்களையும், மும்மொழி மூலபாடங்களை இணைத்து நேர சூசிகையை போட்டு மாணவர்களை கவர்ந்திழுக்கின்றனர். பெற்றோரும், மாணவரும் உளச் சமநிலை இல்லாது தடுமாறுகின்றனர். இதனால் மாணவர்கள் ஞாயிறு மறைக்கல்வி திருப்பலிக்கோ, மறைவகுப்புக்கோ செல்லாது சாவான பாவத்தை கட்டிக்கொள்கின்றார்கள். பெற்றோரோ தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களையும், மறையாசிரியர்களையும், பங்குத் தந்தையர்களையும் திருப்திப்படுத்துவதற்காக ஒருகிழமை தனியார் கல்வி நிலையத்திற்கும், மறுகிழமை மறைக்கல்வி வகுப்பிற்கும் அனுப்பி வைப்பது மாணவரை பிழையான வழியில் இட்டுச் செல்லும் செயலாக அமைகிறது. இதில் உண்மையில் கத்தோலிக்க சமய மாணவர்கள் புத்திக் கூர்மையும் ஆளுமை விருத்தியும் கற்றல் திறனும், சமய பக்தியும்...

தொடர்ச்சி 15ம் பக்கம்

ஞான ஒளி
GNANA OLI

கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல 0112695984,0114899611 பெக்ஸ் 0112692586,
மின்னஞ்சல் முகவரி cgnanaoli@yahoo.com
01,மாசி மாதம், 2015 ஞாயிற்றுக்கிழமை.

## நம்மில், குடும்பத்தில், பங்கில், பணியகத்தில் முழுத்திருச்சபையிலும் விடுதலைப் பயணங்கள் தொடர வேண்டும். அதற்கு தடையாயிருக்கும் அனைத்து தடயங்களும் உடைத்தெறியப்படவேண்டும்.

இலங்கை நாடு சுதந்திரம் பெற்று ஆண்டுகள் பல கடந்துவிட்டாலும், இன்னமுமே விடுதலை வேண்டும், சுதந்திரம் வேண்டும் என்று பல போராட்டங்கள் நடந்துக் கொண்டுதான் இருக்கின்றன. இன்று ஒவ்வொரு மனிதனையும் அடிமைப்படுத்துகின்ற மிகப்பெரும் சக்தியாக இருப்பது அவனின் அகம். மனிதன் போராடி களைய வேண்டிய அடிப்படை அடிமைத்தனம் புறத்திலே இருப்பதை விட அகத்திலே தீவிரமாக உள்ளது. மனிதர்கள் மற்றவர்கள் மட்டிலே தங்களுக்குள் வளர்த்துக் கொள்ளும் வெறுப்புக்கள், விரோதங்கள், குரோதங்கள், இன்னும் தங்களுக்குள்ளே ஏற்படுத்திக் கொள்கின்ற தாழ்வுமனப்பான்மை, குற்றப்பழி உணர்வுகள், தீராத பேராசை, திருப்திப்படுத்த முடியாத போதை வெறி, சாதிய ஏற்றத்தாழ்வுகள் இவ்வாறாக உள்ளும் புறமும் மனிதர்கள் அடிமைப்பட்டு சுதந்திரத்தை இழந்தவர்களாக காணப்படுகின்றனர்.

கிறிஸ்துவின் இரத்தத்தால் பெறப்பட்ட விடுதலை அமைதி மகிழ்ச்சி எங்கே? “உங்களுக்குள் பெரியவராய் இருக்க விரும்புபவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும். உங்களுக்குள் முதன்மையானவராக இருக்க விரும்புபவர் அனைவருக்கும் பணியாளராய் இருக்கட்டும். ஏனெனில் மானிட மகன் தொண்டு ஏற்பதற்கல்ல, மாறாக, தொண்டு ஆற்றுவதற்கும், பலருடைய மீட்புக்கு ஈடாகத் தமது உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்” (மாற் 10:43-45) இது இன்று விடுதலையை விரும்பும் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டிய ஒன்றாகும். உலகில் அமைதி நிலவ வேண்டுமாயின் இறைவன் வகுத்த ஒழுங்கு முறையை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும். தனி மனிதர், குழுக்கள், நாடுகள், அனைத்தும் எல்லா மனிதருடையவும் குழுக்கள் மற்ற நாடுகளது உரிமைகளை மதிக்க வேண்டும்.

நம்மில், குடும்பத்தில், பங்கில், பணியகத்தில் முழுத்திருச்சபையிலும் விடுதலைப் பயணங்கள் தொடர வேண்டும். அதற்கு தடையாயிருக்கும் அனைத்து தடயங்களும் உடைத்தெறியப்படவேண்டும். பழக்கத்தால் பாரம்பரியத்தால் சமுதாயத்தின் அமைப்புகளால் ஏற்படுத்தப்பட்ட அகந்தைகள், ஆணவங்கள், அந்தஸ்துக்கள், செல்வாக்குகள் அழிக்கப்பட வேண்டும். அப்போது தான் கிறிஸ்து நிறுவிய இறை அரசு உரிமையை நமதாக்கி சுதந்திரத்தின் காற்றை சுவாசிக்கலாம்.

**இறையாசீருடன்**
**ஆசிரியர்**




### சுதந்திரம் எனது பிறப்புரிமை நாம் பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்போம்

நம் தாய் திருநாடாம் இலங்கை, 1947, மாசி மாதம் 4ஆம் திகதி ஆங்கில ஏகாபத்தியத்தியத்தினின்று விடுதலை பெற்று சுதந்திர காற்றை சுவாசித்தது, நம் முன்னைய தலைவர்களில் பல பேர்களின், முயற்சியினாலும், தியாகங்களினாலும் இதைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள். அதனால் தான் இன்று நாம் பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், வாழும் சுதந்திரம் - பெற்று தலை நிமிர்ந்து பீடுநடை பயின்று வருகின்றோம்.

ஆனால், இன்று அந்நிலை எங்கே..? நாம் அனைவரும் இலங்கையர், எம் நாடு, எம்தாய், நாடு, என்வீடு, என சொல்ல முடியவில்லையே? சாதி இன மத பேதமின்றி வாழ முடியவில்லையே? காரணம் என்ன? உள்நாட்டு / வெளிநாட்டு தீய சக்திகளால் நமக்குள் ஏற்படுத்தப்படும் பிளவுகளும், வன்முறைகளும், அடிப்படைவாதம், சாதி இன மத காழ்ப்புணர்வுகள், நம்மை நெருக்குகின்றனவே? ஆகவே நாங்கள் பெற்ற சுதந்திரம் இன்னும் இருக்கிறது என்றால் அது கேள்விக்குறியாகவே உள்ளது?

அன்று ஒரே நோக்கத்திற்காக ஒன்றாக இணைந்துப் போராடிப் பெற்ற சுதந்திரத்தை இன்று சுயநலமாய் ஒவ்வொருவரும் பல நோக்கத்திற்காக பயன் படுத்துகிறார்கள். சுதந்திரம் இன்று பலருக்கு எட்டாக்கனியாகவே இருக்கின்றது. நாம் பல சமய கலாச்சார உள்ள “இலங்கையர்” எனும் முகவரியைக் கொண்டிருந்தாலும் நம் உள்ளத்து உணர்வளவிலே நாம் வேற்றுமைகளை இன்றளவும் பாராட்டியே வருகின்றோம். வெள்ளையர்களிடம் பெற்ற சுதந்திரம் இன்று கொள்ளையரிடம் முடங்கிக்கிடக்கிறது. ஆகவே அதில் இருந்து விடுதலைப்பெற உண்மையான சுதந்திரத்தோடு ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து அத்தோடு அவரவர் தனித்தன்மையோடு பெற்ற சுதந்திரத்தை பேணி காப்பது நம் ஒவ்வொருவருடைய கடமை. சுயநலம் தவிர்த்து பிறர் நலம் பேணி. இலங்கையர் என்பதில் பெறுமைக் கொள்வோம் ஒற்றுமையை வளர்ப்போம்.

## சுதந்திரம் வேண்டும், வேண்டாம்

**சுதந்திரம் வேண்டும்**
ஆனால் அதற்காக நினைத்த
அனைத்தையும் நியாப்படுத்தும்
**சுதந்திரம் வேண்டாம்**

**சுதந்திரம் வேண்டும்**
ஆனால் அதற்காக விரும்பிய
அனைத்து ஆசைகளையும்
முன்நிறுத்தும்
**சுதந்திரம் வேண்டாம்**

**சுதந்திரம் வேண்டும்**
ஆனால் சிறுமை மக்களை
அவதிப்படுத்தும்
**சுதந்திரம் வேண்டாம்**

**சுதந்திரம் வேண்டும்**
ஆனால் தாய் நாட்டிலே உரிமை
அற்ற நிலை என்ற
**சுதந்திரம் வேண்டாம்**

**சுதந்திரம் வேண்டும்**
ஆனால் சாதி, வெறி பிடித்த
**சுதந்திரம் வேண்டாம்**

**சுதந்திரம் வேண்டும்**
உரிமைகளை தட்டிக் கேட்காது
தயக்கம் காட்டும்
**சுதந்திரம் வேண்டாம்**

## உண்மை உரைக்கும் — கமிலஸ்



# திருப்பாலத்துவ தினம்

25.01.2015



# நாம் உலகை அலங்கரிக்கும் இயேசுவின் சிறுமலர்களாவோம்

இன்று என்றுமில்லா வகையில் சிறுவர்களின் உரிமையானது தேசிய மற்றும் சர்வதேச அளவில் அலங்கரிக்கப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் சிறுவர்கள் சமுதாயத்தின் முக்கியமான உறுப்பினர்களாக மதிக்கப்படாமலும் அவர்களுடைய உரிமைகளுக்கும் முக்கியத்துவம் வழங்கப்படவில்லை.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மீது முழுமையான கட்டுப்பாட்டினை கொண்டிருந்தனர். இன்று சிறுபிள்ளைகள் தமக்குரித்தான எதிர்ப்புகள் மற்றும் செயல்திறனுடனும் மனித மாண்புடையவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். எதிர்காலத்தின் வளர்ந்தோர் என்ற கண்ணோட்டம் மாறி இன்று சிறுவர்கள் சிறுவர்களாக மதிக்கப்படுகின்றார்கள். சிறுவர் உரிமையானது உலகளாவிய மனித உரிமை பிரகடனத்தில் பதிக்கப்பட்டுள்ளது என்பதையும் இன்று நாம் கருத்திற் கொண்டிருக்க வேண்டும். எந்த ஒரு சமூகத்தினதும் எதிர்காலம் சிறுவர்கள் உடனே உள்ளது என்கின்ற அழியாத உண்மையானது இன்று உலகளாவிய ரீதியில் அடையாளம் காணப்பட்டுள்ளது. இன்றைய சிறுவர்கள் நாளைய சமுதாயத்தின் உறுப்பினர்களும், தலைவர்களுமாவர். சிறுவர்கள் நன்கு பராமரிக்கப்பட்டும் உரிய பயிற்சியும் கொடுக்கப்பட்டால் நாளைய சமூகம் நற்பிரஜைகள் கையில் சென்று சேரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. சிறுவர்கள் முழுமையான உருவாக்குதலுக்கு உரித்துடையவர்கள். இவ்வுருவாக்கலானது வெறும் உணவு, உடை, உறைவிடம் மற்றும் மருத்துவ தேவைகள் உள்ளடங்கியது மட்டுமன்றி!அவர்களது அடிப்படையான உளவியல் மற்றும் ஏனைய தேவைகளை உள்ளடக்கியதாக அமைய வேண்டும். அன்பும் அரவணைப்பும் நிறைந்த சூழலில் வளர்வதற்கு அவர்கள் உரித்துடையவர்கள்.

பழைய ஏற்பாட்டில் பிள்ளைகள் இறைவன் அருளும் கொடையாகவும் ஆசீர்வாதமாகவும் கருதப்பட்டனர் (தொ.நூ 1:28, 4:1, தி.பா 127:3-5, 125:3-4) பிள்ளைகள் இறைவன் அருளும் கொடையாக கருதப்பட்டாலும் சமுதாயத்தில் அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. (வி.ப 12:37, லேவி 27:1-7) பிள்ளைகள் புரிந்துகொள்ளும் தன்மையற்றவர்கள் என்ற வகையில் அவர்களுடைய கருத்துக்கள் பெரிதும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. சிறுவர்களுடன் பேசுவது நேரத்தை விரையம் செய்தலுக்கு சமமாக கருதப்பட்டது. இயேசு பிறந்து வளர்ந்த கலாச்சாரச் சூழலை நோக்குகையில் சிறுவர்கள் எந்தவித உரிமையும் அற்றவர்களாகவும், சமுதாயத்தில் முக்கியமற்றவர்கள் எனும் கருத்தே காணப்பட்டது.

எனவே இயேசு சிறுவர்களுடன் ஏற்படுத்த விரும்பிய உறவும், அவர்களை பணிவின் அடையாளமாகவும், உதாரணம் காட்டியது திருத்தூதர்கள் உள்ளத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. சிறுவர்கள் அறிஞர்களோ அல்லது வேறுபட்ட அனுபவங்கள் கொண்டவர்களோ அல்ல இதன் காரணமாக அவர்களது கருத்துக்களும், விருப்பங்களும் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டன. ஆனால் இயேசு அப்பேறபட்ட எண்ணத்தை சவாலுக்குட்படுத்தினார். சிறுவர்கள் பல நல்ல பாடங்களை பெரியவர்களுக்கு கற்றுத்தரக்கூடியவர்கள் எனும் கருத்தை ஆணித்தரமாக எடுத்துக் காட்டினார்.

மத் 18:1-5 மற்றும் 19:13-15 சிறுவர்களை சமுகத்தில் மையப்படுத்தி பெரியவர்களுக்கும் தனது திருத்தூ தருக்கும் சிறப்பான பாடங்களை கற்றுக்கொடுத்ததை அவதானிக்க முடிகிறது. இயேசுவின் சீடர்கள் விண்ணரசில் மிகப் பெரியவர் யார் என அறிய விரும்பினர். இயேசு அவர்களுக்கு நேரடியான பதில் கொடுக்காமல் சிறுபிள்ளை ஒன்றை அவர்கள் மத்தியில் நிறுத்தி, "சிறுபிள்ளைகள் போல் நீங்கள் மாறாவிடில் விண்ணரசில் நுழைய மாட்டீர்கள். இந்த சிறு பிள்ளையைப் போலத் தம்மை தாழ்த்திக் கொள்பவரே விண்ணரசில் மிகப் பெரியவர்" (மத் 18:3-4) இயேசு சிறுவர்களை கிறிஸ்தவ வாழ்வின் மாதிரியாக எடுத்துக் காட்டுகின்றார்.

**ஆக்கம் :**
**அருட்பணி. சுகுநேந்திரா குருஸ்**
**திருகோணமலை மறைமாவட்ட இயக்குனர்**

தொடர்ச்சி 15ம் பக்கம்

# வாக்களிக்கப்பட்ட ஆறுதல்

# இயேசுவை காணிக்கையாக ஒப்புக்கொடுத்தல்



உண்மையான அன்பு நிறைய கொடுத்தல்களை உள்ளடக்கியது. எதையும் கொடுக்காமல் ஒருத்தரை அசலாக அன்பு செய்ய முடியாது. ஆங்கிலத்தில் ஒரு அழகான வாக்கியம் உண்டு. You can give without Loving, But you can never love without giving" கொடுப்பதில் மூன்று வகை உள்ளது.

ஒன்று : தன்னிடம் இருப்பதிலிருந்து கொடுப்பது (உ+ம் சக்கேயுவைப்போல்) தன்னிடம் இருந்த அபரிதமான செல்வத்திலிருந்து பெரும்பாலானவற்றை மற்றவர்க்கு கொடுக்க நினைப்பது சக்கேயுவின் தீர்மானம்)

இரண்டு : தன்னிடம் இருப்பது எல்லாவற்றையும் கொடுப்பது (உ+ம் தன் வாழ்வாதாரத்திற்கு இருந்த ஒரு செப்புக் காசு முழுவதையும், கோயில் உண்டியலில் போட்ட விதவை)

மூன்றாவது : இருப்பது எல்லாவற்றையும் கொடுத்து தன்னையும் கொடுப்பது. இந்த மூன்றாவது வகைத்தான் கொடுத்தலின் உச்சக்கட்டம் . இதற்கு தலை சிறந்த (உ+ம்) நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து. இம்மாதம் 2ஆம் திகதி இயேசுவை கோயிலில் காணிக்கையாக அர்ப்பணிக்கப்பட்ட திருவிழாவை திருச்சபை கொண்டாடுகிறது. லூக் 2:23 இறைவார்த்தைகள் "ஆண் தலைப்பேறு அனைத்தும் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்படும்" என்ற திருச்சட்டத்தின்படி, இயேசுவை அவருடைய பெற்றோர் காணிக்கையாக கொடுக்க எருசலேம் ஆலயத்திற்கு சென்றார்கள் என்று சொல்கிறது.

இயேசுவின் வாழ்வில் பின்வரப்போகும், அத்தனை கொடுத்தல் -களுக்கும், இது ஒரு அச்சாரமாக அமைகிறது. அதாவது இயேசு தன் வாழ்நாளில் மனுக்குலத்திற்காக அன்பைக் கொடுப்பார் கருணையைக் கொடுப்பார் மன்னிப்பைக் கெடுப்பார் சமாதானத்தைக் கொடுப்பார் இரக்கத்தை கொடுப்பார் விடுதலையைக் கொடுப்பார் மீட்பைக் கொடுப்பார் கடைசி சொட்டு இரத்தத்தைக் கூட தமக்காக வைத்துக் கொள்ளாமல் முழுவதையும் கொடுப்பார், உயிரைக் கொடுப்பார், உயிர்ப்பையும் கொடுப்பார், இவையாவும் இயேசுவின் 3 வருட பணி வாழ்க்கையில் அற்புதமாக நிறைவேறியது. இயேசுவின் பணி வாழ்க்கை முழுவதும் அவர் ஓர் எதிர்க்கப்படும் அடையாளமாகவே இருந்தார். பார்வையற்ற ஒரு நபருக்கு இயேசு பார்வை தந்தபோது, "அவர் ஓய்வுநாளை அவமதிக்கிறார்" என்றார்கள். பேய்களை ஓட்டினால், "பெயல்செபூலின் கூட்டாளி" என்றார்கள். கடவுளின் இரக்கத்தை,மன்னிப்பை போதித்தால், "பாவிகளுககு சலுகை பண்ணுகிறார்" என்றார்கள். நண்பர்களோடு விருந்தாடினார். இயேசு ஆலயத்தில் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கும் போது, குழந்தையைக் குறித்து சிமியோன் கூறிய வார்த்தைகள் இயேசு இஸ்ராயேலுக்கு வாக்களிக்கப்பட்ட ஆறுதலாக இருப்பார். எதிர்க்கப்படும் அடையாளமாக இருப்பார் (லூக் 2:22-40) மரியாளைப் பார்த்து சிமியோன் "அம்மா உன் உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவிப் பாயும்" என்றார். சிமியோன் கூறிய இறைவாக்கு இயேசுவில் இன்று நிறைவேறியது.

ஆகவே இயேசுவின் காணிக்கை விழாவில் பங்கெடுக்கும் நாமும் இறையரசுக்கு காணிக்கையாக எம்மையே இறைவனுக்கு காணிக்கையாக்குவோம்.

மற்றவரை அன்பு செய்ய மன்னித்து வாழ பரிவு காட்ட சமாதானம் செய்ய இரக்கம் காட்ட விடுதலை அளிக்க நம்மையே அர்ப்பணிப்போம்.



# அவர் வருவாரா...?



## அருட்பணி. அந்திரியாஸ் பர்னாந்து அ.ம.தி

கடந்த வருடம் ஆனி மாதம் திருத்தந்தை இலங்கை நாட்டுக்கு வரவிருக்கின்றார் என்ற செய்தி கசியத் தொடங்கியது. இச்செய்தி பரவத் தொடங்கியதுமே ஒவ்வொருவருடைய மனதிலும் வெவ்வேறு உணர்வுகள். திருத்தந்தையின் வருகை நல்வரவாக இருக்கவேண்டும் என்று விரும்பியோரும் உண்டு. இலங்கை போன்ற நாட்டிற்கு ஏன் அவர் வரவேண்டும் என்று கேள்வி எழுப்பியவர்களும் உண்டு. அவர் வரக்கூடாது என்று எதிர்த்து மடல் அனுப்பியவர்களும் உண்டு. ஏன் அவர் வரக்கூடாது என்று எதிர்த்தார்கள்? இலங்கை தேசத்திலே அடாவடித்தனங்களும், அரசாங்கத்தினால் கட்டவிழ்த்து விடப்பட்ட மனித உரிமை மீறல்களும், மனித உயிர் அழிப்புக்களும் இடம்பெற்றுள்ளன. எனவே இவற்றுக்கு நீதியான தீர்வு வழங்கப்படாதவரை திருத்தந்தை இங்கு வரக்கூடாது என்று மனித உரிமை, மற்றும் மனித நலன் விரும்பிகள் விரும்பினார்கள். மேலும் திருத்தந்தையின் வருகையின் பின்னணியில் அரசியல் காய்நகர்த்தல்கள் இருப்பதாக சிலர் நம்பினார்கள். எனவே அவர்களும் இக்காலகட்டத்தில் திருத்தந்தை இலங்கைக்கு வருவதை விரும்பவில்லை. இன்னும் பலர் மாசுபடிந்த, கறைநிறைந்த அரசுதரப்பினரோடு, திருச்சபையின் பணியாளர்கள் கைகோர்த்து இதனை நடத்துவதினால், திருத்தந்தையின் வருகையை இக்குழுவினர் விரும்பவில்லை. பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல, ஜனாதிபதி தேர்தலும் அறிவிக்கப்பட்டதும், திருத்தந்தை வருவார் என்று ஓரளவாவது நம்பிக்கையோடு இருந்த மக்கள் மனதில், ஓர் பேரிடி விழுந்தது போன்ற உணர்வு ஏற்பட்டது. ஆகவே எங்கு பார்த்தாலும் எல்லோருடைய மனதிலும் எழுந்த கேள்வி அவர் வருவாரா...? பாப்பரசர் வருவாரா? எல்லோருடைய மனதிலும் இக்கேள்வி எழுந்தது. அவர் வரக்கூடாது என்று திருச்சபையின் உயர்மட்ட பணியாளர்களை திட்டித் தீர்த்தோரும் உண்டு. ஐயோ அவர் வரமாட்டாரா? என்று அங்கலாய்த்த ஏழைகளும் உண்டு. நிச்சயமாக வருவார் என்று திருச்சபையின் உயர்மட்ட பணியாளர்கள் நம்பிக்கை ஊட்டிக் கொண்டே இருந்தனர். ஈற்றிலே எல்லாம் இனிதே நிறைவுற்றது. எல்லோருடைய மனதிலும், தனக்கென்று ஓர் தனி இடத்தினைப் பெற்றுக் கொண்டு சென்று விட்டார். உண்மையிலேயே தன்னிகர் இல்லாத் தலைவர் அவர். உங்கள் ஒவ்வொருவருடைய உணர்வலைகளும் தனித்துவமானது. திருத்தந்தையின் வருகையினால் ஏற்பட்ட பல்வேறு உணர்வலைகளில் சிலவற்றை பகிர விரும்புகிறேன்.

தை மாதம் 8ம் திகதி 2015 அன்று எம் தேசத்தின் இன்னுமொரு ஜனாதிபதித் தேர்தல் மாற்றம் ஒன்று வேண்டும் என்ற வாஞ்சையோடும், அங்கலாய்ப்போடும் தேர்தலில் வாக்களித்தோரும் உண்டு. மாற்றம் தேவை-யற்றது என்று நிராகரித்தோரும் உண்டு. மறுநாள் குழப்பம் ஏற்படுமா? ஊரடங்குச் சட்டம் அழுலுக்கு வருமா என்று அங்கலாய்த்தோரும் அமைதியோடு இருக்கும் வண்ணம் அனைத்துமே ஓர் மயான அமைதி. மறுநாள் 9ம் திகதியே. புதிய ஜனாதிபதி பணியினை பொறுப்பேற்க பெரும்பாலானோர் மனதில் நிம்மதி பெருமூச்சு, நம்பிக்கை ஏற்படத் தொடங்கியது. அன்று மாலை இரண்டு ஊடகவியலாளர்கள் நடந்து முடிந்த தேர்தலைப் பற்றிய விமர்சனப் பார்வையை முன்வைத்தனர். இருவருமே கத்தோலிக்கர் அல்ல. அவர்களுடைய உரையாடலின் இறுதியில் அவர்கள் கூறியது “திருத்தந்தை இலங்கை தேசத்திற்கு வரவேண்டும். அவருடைய ஆசீர்வாதம் எங்களுக்குத் தேவை. அவர் வரவிருப்பதனால் தான் இந்த அமைதி எங்களுக்கு கிடைத்திருக்கிறதோ என்ற ஆச்சரியத்தோடு உரையாடலை நிறைவு செய்தனர். உண்மையிலேயே இது ஒரு தெய்வச் செயல்.

திருத்தந்தையை பார்க்கவேண்டும் என்ற வாஞ்சையோடு இருந்தவர்கள் கத்தோலிக்கர் மாத்திரமல்ல. எத்தனையோ ஏனைய சமயத்து மக்களை கண்கூடாகக் கண்டேன். என்னோடு பணிபுரியும் பல இந்து சகோதரர்கள், “திருத்தந்தையை நன்றாக பார்ப்பதற்கு ஏற்ற இடம் எது? என்று கேட்டார்கள். ஒரு நாள் ஓர் இந்து சகோதரி தொலைபேசியினூடாக திருத்தந்தை எவ்வழியாக வருவார் என்று கேட்டார்? தான் பல ஆண்டுகளாக புற்றுநோயினால் துன்புறுவதாகவும், திருத்தந்தையைக் கண்டால் தனக்கு சற்று ஆறுதலாக இருக்கும் என்று சொன்னார். அந்த வேளையிலே “இயேசுவினுடைய ஆடையை தொட்டால் குணமடைவேன்” என்று நம்பிய பெண்ணைப்பற்றிய நற்செய்தி பகுதியை நினைவுகூர்ந்தேன். மேலும் “நம்மைத் தேடி இவ்வளவு பெரிய மனிதர் வருகின்றார். ஆகவே நாங்கள் போய் அவரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலோடு வீதிகளில் காத்திருந்தோர் பலர். வீதிகளில் போய் பார்ப்பதைவிட, தெளிவாக TVஇல் பார்க்கலாம் என்று வியாக்கீனம் கொடுத்தவர்களும் நம்மத்தியில் உண்டு. பல்லாயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் திரண்டு வந்ததைக் காணும் போது மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. திருத்தந்தை அவர்கள் விமான நிலையத்தில் இருந்து வெளியே வந்ததும் அதிர்ந்து போனார்கள் காரணம் 40 யானைகள் அலங்காரமாக ஆடையணிந்து அன்பாக வரவேற்றன. வத்திக்கான் ஊடக பேச்சாளர் “இப்படி எங்கேயும் இதற்கு முன் நடந்ததேயில்லை” என்று கூறினார். வீதியின் இருமருங்கிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் சிறுவர் சிறுமியர் உட்பட திருத்தந்தையின் கொடியினை அசைத்து அவரை வரவேற்றது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. திருத்தந்தையும் பயணக் களைப்பையும், வெப்பத்தின் சூட்டையும் தாங்கிக் கொண்டு புன்முறுவல் பூத்த முகத்துடன் கையசைத்து அனைவருடைய உள்ளங்-களையும் கொள்ளை கொண்டார்.

மறுநாள் 14ம் திகதி காலிமுகத்திடல் மக்கள் வெள்ளத்தால் அலைமோதியது. இத்தகைய ஓர் மக்கள் கூட்டத்தை இலங்கையின் வரலாற்றிலேயே காணவில்லை என்று தான் சொல்லவேண்டும். மக்கள் எல்லோரும் பார்க்கும் வண்ணம் திருத்தந்தை மக்கள் மத்தியில் வலம் வந்தார். நல்ல ஆயன் தன் மந்தையின் வாசனை அறிந்தவராக, விசேஷமாக மாற்றுத் திறனாளிகளை சந்தித்தார். அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களுக்கு கிடைத்த பாக்கியம் தான் என்னே!

அன்று காலை திருப்பலிக்கு வந்திருந்த ஒருவர் சொன்னார். “நான் திருத்தந்தையைக் கண்டு விட்டேன். இனி இறந்தாலும் பரவாயில்லை” ஒரு பௌத்த சகோதரி “காலிமுகத்திடலுக்கு வந்து, திருத்தந்தையைப் பார்த்து, எனக்கு ரொம்ப பெருமையாகவும் இருக்கிறது. இதில் கலந்து கொள்வது எனக்கு பெரும் பாக்கியமாக உள்ளது” என்றார்.

நற்செய்தியிலே “இயேசுவை எங்களோடு தங்கி இரும்” என்று மக்கள் கூட்டம் கேட்ட வேளையிலே “நான் மற்ற இடங்களுக்கும் நற்செய்தி அறிவிக்க செல்லவேண்டும்” என்றார் அது போன்றே எம் திருத்தந்தையும் தனது 78 வயதிலும் தனது களைப்பையும் சோர்வையும் பாராது விண்ணில் பறந்து சென்றார். மடு திருப்பதியை நோக்கி. கலைமான்கள் நீரோடையை ஆர்வமாய் தேடுவதைப்போல், திருத்தந்தையின் வருகைக்காக காத்திருந்த மக்கள் முகத்தில் என்னே மகிழ்ச்சி. தண்ணீர் கண்ட மானைப்-போல கதிரவனை கண்டு இதழ் விரிக்கும் மலர்களைப் போன்று மகிழ்ச்சி ஆரவாரம். மடுத்திருப்பதியில் கால்பதித்த முதல் திருத்தந்தை. மக்களை தொட்டார், ஆசீர்வதித்தார். மடுத்திருப்பதி நிகழ்வில் ஓர் காட்சி இன்னும் என் மனக்கண்முன் நிற்கிறது. வழிபாட்டின் நிறைவில் திருத்தந்தை அவர்களுக்கு மரத்தினாலான மடு அன்னையின் திருச்சொரூபம் நினைவுச் சின்னமாக வழங்கப்பட்டது. அதனை திருத்தந்தை இறுகப்பற்றிக் கொண்ட நிலை பார்த்தோரை மெய்சிலிர்க்க வைத்தது. ஒரு தாய் தன் குழந்தையை பாதுகாப்பாய் தூக்கிச் சுமப்பதுபோல், அவர் அத்திருச்சொரூபத்தை தாங்கிச் சென்றார். இப்படியே எழுதிக் கொண்டே செல்லலாம். ஆனால் எல்லாவற்றிற்கும் ஓர் வரையறை உண்டல்லவா... ஆகவே கொஞ்சம் பொறுங்க. கடைசி சில வார்த்தைகள் திருத்தந்தையின் பயணத்தின் நிறைவில் வத்திக்கான் ஊடகப் பேச்சாளர் கூறியவை இவை. “கத்தோலிக்கர் சிறுபான்மையாக வாழும் இந்நாட்டில் இத்தகைய ஓர் மகத்தான வரவேற்பு திருத்தந்தைக்கு கிடைத்ததையிட்டு பேருவகை அடைகின்றோம்”.

திருத்தந்தையை காணும் பாக்கியம் எல்லோர்க்கும் கிடைப்பது இல்லை. அதுவும் மக்கள் மேல் பரிவும், பாசமும் கொண்டு, திருச்சபைக்குள்ளே புதுப்பித்தலை தூய ஆவியின் துணையோடு ஏற்படுத்திக் கொண்டு வரும் ஓர் திருத்தந்தையை கண்ணாரக் கண்டு மகிழ்வதற்கு நாம் உண்மையிலேயே கொடுத்து வைத்தவர்கள். எனவே, இதற்கு வழி சமைத்த எம் ஆயர்கள் அனைவர்க்கும் குறிப்பாக, பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்களுக்கும், அரசாங்கத் தரப்பிற்கும் நன்றிகள்.

**நாமும் திருத்தந்தைக்காக, எம் பணியாளர்களுக்காக அன்றாடம் செபிப்போம்.**




## வளர்ந்தோருக்கான சுருக்கமான மறைக்கல்வி

### கடவுளுடைய கட்டளைகள் பத்து

**ஏழாவது : "களவு செய்யாதிருப்பாயாக"**

**பத்தாவது : "பிறர் உடமைகளை விரும்பாதிருப்பாயாக"**

1. திருடுவதும், கள்ள வழக்காடுவதும், அநியாய வட்டி வாங்குவதும், வியாபார விடயங்களில் பிறரை ஏமாற்றி மோசம் செய்வதும், பிறருக்குச் சேதம் வருவிப்பதும், எவ்விதத்திலாவது இப்பேர்ப்பட்ட தீய ஆசைகளுக்கு இடம் கொடுப்பதும் இவ்விரு கற்பனைகளுக்கு விரோதமான பாவங்களாகும்.
2. வாங்கின கடனைத் திருப்பிக் கொடுக்கவும், கண்டெடுத்த பொருளை உடையவர்களுக்குக் கொடுக்கவும், பிறருக்கு வருவித்த நஷ்டத்துக்கு பரிகாரம் செய்யவும் (உத்தரிக்க) கடமைப்பட்டிருக்கின்றோம்.
3. அநியாயம் செய்கிறவர்களுடைய பிள்ளைகள் அவற்றைத் திருப்பிச் செலுத்த வேண்டும். அதாவது பரிகாரம் செய்யாமல் யாராவது இறக்க நேரிட்டால், அவனுடைய ஆஸ்தியைப் கைப்பற்றிக் கொள்கிறவர்கள் பேரில் அவர்களது கடனும் வந்து சேரும்.

**எட்டாவது : "பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக"**

1. எந்தவிதமான பொய்யும், பித்தலாட்டமும் சொல்லாதிருக்க வேண்டியதும் தவிர, விசேடமாய்ப் பிறருக்குப் பொல்லாப்பு, நஷ்டம் வருவிக்கத்தக்க பொய் சொல்லக்கூடாது.
2. புறணி, கோள், குண்டனி சொல்லுவதும் அப்பேர்ப்பட்ட பேச்சுக்களுக்குக் காது கொடுப்பதும் குற்றமாகும். பிறரைப்பற்றி தகுந்த காரணமின்றி ஏற்படும் இழிவான, சந்தேக எண்ணங்களை ஏற்றுக் கொள்ளக்கூடாது.
3. பொய்ச்சாட்சி, கோள், குண்டனி முதலியவற்றால் பிறருக்கு வருவித்த பொருள் நஷ்டத்தை திரும்பிச் செலுத்தவும், ஒருவருடைய பேரைக் கெடுத்திருப்பின், கூடியமட்டும் கட்டாயமாகப் பரிகாரம் செய்யவும் வேண்டும்.

**வினாக்கள் :**

1. பெற்றோர் வருவித்த நஷ்டத்தை பிள்ளைகள் செலுத்த வேண்டுமா? ஏன்?
2. பொய்யும், பித்தலாட்டமும் நிறைந்த சமுதாயத்தில் நேர்மையாக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டால் ஏற்படும் விளைவுகள் பற்றி குறிப்பிடுக?

*தொடரும்....*

**விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி**
*வளர்ந்தோருக்கான சுருக்கமான மறைக்கல்வி*
ஆசிரியர், ஞான ஒளி,
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய
மாவத்தை, கொழும்பு – 08.

## இறைவனை நீ காண...

**விசுவாசம் நாம் இறைவனை**
**புரிந்து கொள்வதற்கான வாசம்**
**அவ்வாசத்தை நீ நுகர்ந்தால்**
**இறைவனுக்கு உன்னிடத்தில் வரும் பாசம்**
**அப்பாசத்தையும் நீ உணர்ந்தால்**
**உன்னிடத்திலும் வரும் நேசம்**
**அந்நேசத்தால் நீ,**
**எங்கும் வாசம் செய்யும் தூய ஆவியை**
**உன் ஆவிக்குள் நீ காண்பாய்**
**அவ்வாறு நீ கண்டால் இலகுவில்**
**இறைவனையும் நீ காண்பாய்**

செல்வி. எல். எனஸ்டிகா நொயலின்
புனித. மரியாள் தேவாலயம், நாயக்கந்தை.




## குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

*பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா*
*உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.*

# கிறிஸ்துவைச் சந்திப்பது எப்படி?



"உங்களுள் இருவர் மண்ணுலகில் தாங்கள் வேண்டும் எதைக் குறித்தும் மனமொத்திருந்தால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தை அதை அவர்களுக்கு அருள்வார். ஏனெனில் இரண்டு அல்லது மூன்றுபேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடி இருக்கிறார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கின்றேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கின்றேன்" என்று மத்தேயு 18: 19-20ல் கூறப்படுகிறது.

கிறிஸ்துவின் நாமத்தால், அன்பின் நாமத்தால் ஒற்றுமையாகினால், ஒருமனப்பட்டால் அங்கே கிறிஸ்துவின் பிரசன்னத்தை அனுபவிக்க முடியும். அவர் தம்மை வெளிப்படுத்த ஆரம்பிக்கிறார். ஆனால் கள-வெடுக்க, மற்றவரது பெயரைக் கெடுக்க ஒன்று சேர்ந்தால் அவரது பிரசன்னம் இருக்கமாட்டாது. கிறிஸ்துவைச் சந்திக்க முக்கியமான இடம் குடும்பமாகும். அவரது பிரசன்னம் கண்ணுக்குத் தெரியும் விதத்தில் அல்ல, எம்மால் அனுபவிக்கக்கூடிய அமைதி, வல்லமை வெளிப்படத் தொடங்கும்.

ஒரு கணவன் தனது மனைவி பிள்ளைகளைக் கண்ணீரில் ஆழ்த்திவிட்டுக் கோயில் கோயிலாகத் திரிந்தாலும் அவரைச் சந்திக்க முடியுமா? அதுபோன்றதே மனைவி பிள்ளைகளும் முதலில் தான் வாழும் குடும்பத்தில் கிறிஸ்துவைச் சந்திக்க வேண்டும். ஒருவர் ஒருவரோடு ஒற்றுமையாக இருக்க தன்னைப் பலியாக்க வேண்டும். அப்பொழுதுதான் திருப்பலி அர்த்தமுள்ளதாக அமையும்.

11ம் நூற்றாண்டில் திருச்சபையில் நற்கருணையைப் பற்றிய விசுவாச வேதகலாபனை ஏற்பட்டது. நற்கருணை ஒரு ஞாபகச் சின்னம் மட்டுமே. அதில் கிறிஸ்து இல்லை என்று ஒரு சிலர் கூறத்தொடங்கினர். அனால் திருச்சபை ஒற்றுமையில் கிறிஸ்துவைச் சந்திப்பதைவிட நற்கருணையில் கிறிஸ்துவைச் சந்திக்கலாம் என்பதில் அதிக கவனத்தைச் செலுத்தியது.

நற்கருணை பவனி, நற்கருணை ஆசீர்வாதம், நற்கருணைத் திருவிழா போன்றவைகள் ஆரம்பமாகின. இதனால் மக்களும் நற்கருணைக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆலயத்துக்கு ஓடுகின்றனர். ஆனால் வீட்டில் ஒற்றுமையில் கிறிஸ்துவைச் சந்திக்கலாம் என்பதை மறந்து வீட்டில் ஒரு வாழ்வு, கோயிலில் ஒரு வாழ்வு வாழத் தொடங்கினர் நாம் நற்கருணைக்கும், ஒற்றுமைக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

கிறிஸ்துநாதர் இவ்வுலகிற்கு வந்து இறைவனை அப்பா என அழைக்கும் உரிமையைத் தந்தார். பரலோகத்தில் இருக்கும் எங்கள் பிதாவே என்று கூற வரம் தந்தார். உலகில் உள்ள மக்களைக் குலம், இனம், பிரதேசம் என்று தாழ்த்திவிட்டு அவர்களோடு ஒருமனப்படாது இறைவனை அப்பா என்று எப்படி அழைப்பது? திருப்பலியில் பீடத்தில் எழுந்தேற்றத்தில் இயேசுவை மத்திக்கு அழைக்கும் வல்லமை குருவுக்கு உண்டு. அதே வல்லமை வீட்டில் ஒற்றுமையின் மூலம் எம்மத்திக்கு அவரை அழைக்க எமக்கும் வல்லமையுண்டு. ஒற்றுமை ஆழமாகும் அளவுக்கு அவரது பிரசன்னமும் அழமாகும்.

ஆகவே கிறிஸ்து உயிர்த்தெழுந்தார். அன்பில், ஒன்றிப்பில் அவர் பிரசன்னமாக இருப்பதால், அன்பில் ஒன்றிப்பில் அவரைச் சந்திக்கலாம். அன்பை ஒன்றிப்பை ஏற்படுத்தி எல்லா இடத்திலும், எல்லா நேரத்திலும் கிறிஸ்துவின் பிரசன்னத்தை அனுபவிக்கலாம். ஆழமான அன்பில், ஒன்றிப்பில் கிறிஸ்துவின் பிரசன்னம் வலிமையாய் வெளியாகும் என்பதை மனதில் கொள்வோம்.

*தொடரும்...*

# புத்தகம்

**"தலை குனிந்து என்னைப் பார். தலை நிமிர்ந்து உன்னைப் பார்ப்பேன்"**
*– புத்தகம்*



நம்மை விட்டு விலகாத ஒரே உறவு புத்தகங்கள் மட்டுமே! ஒன்றுமில்லாத மனிதனையும் சிறந்தவனாக செதுக்கும் தன்மை புத்தகத்திற்கு உண்டு. உலக வரலாறுகளில் பல வளர்ந்த நாடுகளைப் புரட்டிப் போட்ட புத்தகங்கள் அதிகம். நாமும் புத்தகங்களைப் புரட்டி வாசிப்போம்.

"நான் ஒரு பெரிய விசயத்தைக் கண்டுபிடித்தேன், முன்பெல்லாம் மனிதனிடம் நான் கண்டிப்பாக அறிந்திராத ஒன்றைப் புத்தகங்கள் என் கண்களுக்குப் புலப்படுத்த முடிந்தது" என்கிறார் மாக்ஸிம் கார்க்கி. "ஒரு மனிதன் எத்தனை புத்தகங்களைப் படித்தான் என்பதை வைத்துத்தான் அவன் வாழ்ந்த நாட்கள் கணக்கிடப்படும்" என்றார் ஹென்றி டேவிட் தோரா. நாம் உயிர் வாழக் காற்றைச் சுவாசிப்பதுபோல முறையாக வாழ நல்ல புத்தகங்களை வாசிக்க வேண்டும். நாம் வாசிக்காத நாட்களை சுவாசிக்காத நாட்கள் என்கிறோம்.

ஒவ்வொரு புத்தகமும் ஒரு போதிமரம். எல்லைகளைக் கடந்து, மொழிகளைக் கடந்து இதயங்களை இணைக்கும் பாலம். அறியாமை என்னும் அக இருளைப் போக்கும் அகல்விளக்கு. அறிவு தாகத்தைத் தீர்க்கும் அதிசிய நீரூற்று. அறிவு என்ற வார்த்தைக்கு இணையானது புத்தகம் மட்டுமே. அறிவை விரிவு செய்வதும், புரட்டிப் போடுவதும், வாழ்க்கையின் ராட்சதச் சுழற்சியில் உலர்ந்து போகின்ற மனசை ஈரப்படுத்திக் கொள்வதற்கும், வற்றிப்போய்க் கொண்டிருக்கின்ற இதயத்தில் அன்பு, அகிம்சை, பண்பு, பணிவு, பாசம், கருணை, ஈகை போன்ற நல்லுணர்வுகளை மெல்லுணர்வுகளாக மாற்றிக் கொள்வதற்கும் புத்தக வாசிப்பு எப்போதும் துணை நிற்கிறது. மனிதர்களைப் போலவே புத்தகங்களுக்கும் இதயம் உண்டு. நம் வாழ்க்கையை நேசிப்பது போல் புத்தகங்களையும் நேசிப்போம். நாம் வாசிக்கும் சில புத்தகங்கள் உழைக்கச் சொல்லும், முளைக்கச் சொல்லும், சிரிக்கச் சொல்லும், அழச்சொல்லும், காயப்படுத்தும், காயங்களுக்கு மருந்துந் தடவும், வாழ்ந்ததைச் சொல்லும், வாழச் சொல்லும். இவ்வாறு ஒவ்வொரு புத்தகமும் அறிவின் சுரங்களாகி உலகத்தையே மாற்றும்.

33 ஆண்டுகால உழைப்பில் உருவான கார்ல் மார்க்ஸ் அவர்களுடைய "மூலதனம்" உழைப்பாளிகளின் வாழ்க்கையை உயர்த்தியது. லியோ டால்ஸ்டாயினை ஞானியாக மாற்றியது. ரூசோவின் புத்தகங்கள். டார்வின் பரிணாமக் கோட்பாட்டிற்குக் காரணம் மால்தூஸ்வின் புத்தகம் "கடையனுக்கும் கடைத்தேற்றம்" என்ற புத்தகம் மோகன் தாசாக இருந்தவரை மகாத்மாவாக மாற்றியது. சேக்கிழார் எழுதிய "பெரிய புராணம்" வெங்கட்ராமன் என்ற சிறுவனையே மகான் ரமண மகரிஷியாக மாற்றியது. "நாம் செய்கின்ற சேவைதான் பூமியில் நாம் வாழ்வதற்குத் தருகின்ற வாடகை" என்ற வரியை வாசித்தபோது சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் உதயமாகி, அகிலம் போற்றும் அன்னை தெரேசாவாக மாறினார். புத்தகம் தான் நம் பலரின் வாழ்க்கையை மாற்றி வாழச் செய்கிறது.

சாதாரண மனிதர்கள் புத்தகத்தோடு இருப்பார்கள்! சாதனை மனிதர்கள் புத்தகத்தில் இருப்பார்கள். நாம் அனைவரும் புத்தகத்திலிருக்க ஆசைப்படுவோம். நல்ல புத்தகங்களைத் தேடிப்பிடித்து வாசிப்போம். நமது வாழ்வும் வளம் கூடும்!.




## பொதுக்காலத்தின் 4வது ஞாயிறு01.02.2015

**வாசக விளக்கம்:** இன்றைய நாளில் இறைவார்த்தைகளில் அதிகாரமும், அலகையும் இணைந்தே இருப்பதை காண்கின்றோம். இன்றைய நவீன உலகில் மனிதன் மனிதனை சந்தித்துப் பேசுவது குறைந்து, மனிதன் இயந்திரங்களோடும், கணிப்பொறியோடும், அலைபேசியோடும் பேசி வரும் கலாச்சாரம் அதிகரித்து வருகிறது. பணத்திலும், வசதியான சூழலிலும் மட்டுமே அன்பு சாத்தியம் என்ற பொய்யான கருத்து மக்கள் மனதில் ஆழமாகவே வேரூன்றிவிட்டது. இன்றைய முதல் வாசகத்தில் ஜெத்ரோ மோசேயிடம் இறைவன் மோசேவுக்கு கொடுத்த அதிகாரத்தை பகிர்ந்து கொடுக்கச் சொல்கிறார். அதிகாரம் பிறரை அடக்குவதற்காக அல்ல, பிறருக்கு பணிசெய்ய பணிக்கிறது. இரண்டாவது வாசகம் நம்மை நாம் அன்பு செய்ய அதுபோல இறைவனை அன்பு செய்ய கற்பிக்கிறது. அலகையான தீமையை அகற்றி வாழும் போது அதிகாரமும் அன்பும் சாத்தியமாகிறது என்பதை நற்செய்தி எடுத்துரைக்கின்றது. எனவே நாமும் இயேசுவின் வாழ்வைப் பின்பற்றி அதிகாரத்திற்கல்ல அன்பிற்கும், பணி வாழ்விற்கும் அடிபணிந்து இன்றைய நவீன அலைகளைப் பிரித்தறிந்து அவற்றில் உள்ள தீமைகளை அகற்றவும், பங்கிலும், பணித்தளங்களிலும் பிறரை அன்பு செய்பவர்களாக மாறவும், தூய்மையுடன் வாழவும் இறையருள் வேண்டித் தொடரும் பலியில் இணைவோமாக.

**முதல் வாசகம் :** இ.ச 18:15-20
ஓர் இறைவாக்கினரை ஏற்படுத்துவேன் என் வார்த்தைகளை அவருடைய வாயில் வைப்பேன்

**பதிலுரைப்பாடல்:** உங்கள் இதயத்தைக் கடினப்படுத்தாதீர் ஆண்டவர் குரலுக்கு செவி சாய்ப்பீர்

**இரண்டாம் வாசகம் :** 1 கொரி 7:32-35
கன்னிப்பெண் தூயவராக இருக்கும் வண்ணம் ஆண்டவருக்கு உரியவற்றில் அக்கறையாக இருக்கிறார்

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா காரிருளில் இருந்த மக்கள் பேரொளியைக் கண்டனர். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடரொளி உதித்துள்ளது அல்லேலூயா

**நற்செய்தி :** மாற் 1:21-28

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

அதிகாரமும், அலகையும் நிறைந்த உலகில் வாழும் மக்களை தனது பணி வாழ்வால் ஒன்றிணைக்கும் தூய திருச்சபையையும் இயேசுவைப்போல் அதிகாரம் கொண்ட போதனையை வழங்கும் திருத்தந்தையையும், ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலை ஊழியர் அனைவரையும் ஆசீர்வதிக்கவும், இவர்கள் தம் பணிவாழ்வில் அன்பையும், அதிகாரத்தையும் அவதானத்துடன் நடைமுறைப்படுத்த தேவையான அருள்வரங்களை பொழிந்தருள வேண்டுமென்று...

எமது நாட்டில் நிலவுகின்ற தீமை என்ற அலகையை அகற்றி, மக்களுக்கு நன்மைகள் புரிவதில் நாட்டின் தலைவர்களும், மக்களும் ஒன்றிணைந்து செயல்படவும், அன்புடன் கூடிய அதிகாரத்தை செலுத்தி, எல்லா மக்களையும் நீதியுடன், நடத்தவும் அதிகாரத்தைப்பரவலாக்கி நாட்டை முன்னேற்றப் பாதையில் வழிநடத்திடவும், தேவையான வரங்களை பொழிந்தருள வேண்டுமென்று...

கிறிஸ்துவை எம் வாழ்வில் ஏற்று, சமுதாயத்தில் சாட்சிய வாழ்வு வாழவும், நற்செய்தியையும், விசுவாசத்தையும் பகிரவும், இயேசுவிலும் அவரது வார்த்தையிலும் கொள்கைப் பிடிப்புள்ளவர்களாக வாழ்ந்து வரவும், திருத்தூதர்களைப் போல் சீடத்துவ வாழ்வு வாழவும் வேண்டிய வரங்களை தந்தருள வேண்டுமென்று

நம்முடைய இதயங்களை கடினப்படுத்திக் கொள்ளாமல், ஆண்டவரின் வார்த்தையைக் கேட்டு அதன்படி நடக்கவும், இயேசுவின் பெயரைப் பயன்படுத்தி அலகையை எதிர்த்து நிற்கவும், நமக்கு கீழ்ப்பட்டவர்களை அதிகாரத்தோடு அணுகாமல் அன்போடு அணுகவும், எமது சிந்தனை சொல் செயல் உறவுகளில் எப்போதும் தூய்மையைக் கடைப்பிடிக்கவும் தேவையான வரங்களை பொழிந்தருள வேண்டுமென்று...

## பொதுக்காலத்தின் 5வது ஞாயிறு 08.02.2015

**வாசக விளக்கம்:** யோபு என்ற ஞானநூல் "நல்லவர்கள் ஏன் துன்பங்களை அனுபவிக்கிறார்கள்" என்பதற்கு அனுபவரீதியாக பதில் தரும் நூல். இதில் இருந்து வரும் இன்றைய முதல் வாசகத்தில் "கடவுள் உங்களிடத்திலிருந்து ஒரு இறைவாக்கினரை உருவாக்குவேன். என் வார்த்தைகளை அவனுடைய வாயில் வைப்பேன்" என்று கூறுவதைப் பார்க்கின்றோம். இரண்டாம் வாசகத்தில் ஊதியத்தை எதிர்பார்க்காமல் பணியாற்றிய பவுல் அடியார் மற்றத்திருத்து-தர்களைப்போல் அல்லாமல் எல்லோரையும் கிறிஸ்துவிடம் கொண்டுவரும் பெருமையே எனக்கு ஊதியம் என்று கூறுகின்றார். இன்றைய திருப்பாடல் உங்கள் இதயத்தைக் கடினப்படுத்தாதீர் ஆண்டவர் குரலுக்கு செவிசாய்ப்பீர் எனக் கூறுகிறது. நற்செய்தியில் இயேசுவின் கலிலேயப் பணி ஒரு மக்கள் மயப்பணி இந்தப் பணியில் குணமளித்தலும், போதித்தலும் பெரும் பங்கு வகித்தன. இந்நிலையில் இயேசு தனக்கு வந்த இடர்பாடுகளையும் தாண்டி பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுகிறார் என்பதைப் பார்க்கின்றோம். இந்நிலையில், நற்செய்திப் பணிக்காக அழைக்கப் பெற்ற நாமும் சாதி, மத, இன, பேதமின்றி கடவுள் அன்பாய் இருக்கிறார் என்ற நற்செய்தியை உலகின் மூலை முடுக்கெல்லாம் பறைசாற்ற நம்முடைய இதயங்களைக் கடினப்படுத்திக் கொள்ளாமல் ஆண்டவரின் வார்த்தைக்கேற்ப நடக்கவும் செபத்தோடு நிலைத்திருந்து பணியாற்றவும் இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் :** யோபு 7:1-4, 6-7
விடியும் வரை படுக்கையில் புரண்டு உழல்வேன்

**பதிலுரைப்பாடல் :** உடைந்த உள்ளத்தோரை ஆண்டவர் குணப்படுத்துகிறார்

**இரண்டாம் வாசகம் :** 1 கொரி 9:16-19,22-23
நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்கு கேடு

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா இயேசு நம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார் நம் துன்பங்களை சுமந்து கொண்டார் அல்லேலூயா

**நற்செய்தி :** மாற் 1:29-39

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

சாதி, மத, இன பேதமின்றி கடவுள் அன்பாய் இருக்கின்றார் என்ற நற்செய்தியை உலகின் மூலை முடுக்கெல்லாம் பறைசாற்றும் தூய திருச்சபையையும், அதன் தலைவரான திருத்தந்தை பிரான்சிஸ் அவருடன் இணைந்து பணியாற்றும் ஆயர், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரையும் நிறைவாக ஆசீர்வதித்துக் காத்தருள வேண்டுமென்று...

எமது நாட்டின் மக்களும், தலைவர்களும் இருப்பவரை இல்லாதரோடு பகிரச் செய்யவும், வேதனையால் துன்பப்படுவோர்க்கு மருந்தாக உதவவும், அல்லல்படுவோர்க்கு ஆறுதல் வழங்கவும், கைவிடப்பட்டோரை அரவணைக்கவும், எல்லோருக்கும் எல்லாமாய் ஆகவும் வேண்டிய நல்மனதைத் தந்தருள வேண்டுமென்று...

இயேசு ஆண்டவர் மனிதருடைய ஆன்மீகத் தேவைகளையும் உடல் சார்ந்த தேவைகளையும் ஒன்றாக இணைத்தார் அவரைப்போல நாமும் செபத்தோடு செயலையும் ஆன்மீகத் தேவைகளோடு உடலின் தேவைகளையும் ஒன்றிணைத்து எல்லோருக்கும் எல்லா விதத்திலும் பணி புரிந்து நற்செய்தியின் தூதுவர்களாய் விளங்கிட வேண்டிய வரங்களை தந்தருள வேண்டுமென்று....

## இறையாட்சி ஏழைகளின் சொத்து

உலகிலே பணக்காரார், ஏழைகள் என்று இருசாரார் இருக்கிறார்கள். உலகப் பார்வையில் பணம், பொருள், நிலம், வீடு, வாகனம் போன்ற செல்வங்களை உடையோர் பணக்காரராகவும், இவை இல்லாதோர் ஏழைகளாகவும் கணிக்கப்படுகிறார்கள். செல்வம் இல்லாதபோது இறைவனை நாடுவதும், செல்வம் உள்ளபோது இறைவனை மறப்பதும் அநேகரின் அனுபவமாக இருக்கிறது. உலகச் செல்வங்களைக் கடவுளாக கணிக்கும் ஒருவர் இறையாட்சிக்குப் புறம்பேயும், கடவுளுக்காக உலக செல்வங்களை இழக்கத் தயார் நிலையில் உள்ள ஒருவர் இறையாட்சிக்கு உள்ளேயும் இருக்கிறார். செல்வர் ஒருவர் இறையாட்சிக்குள் நுழைவது ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவதுபோல் இருக்கிறது (மத் 19:24) என்று இயேசுவே கூறியிருக்கிறார். அதாவது பணப்பற்றுள்ள ஒருவருக்கு இறையாட்சி வெகு தொலைவிலும், பணப்பற்றில்லாத ஒருவருக்கு இறையாட்சி மிக அண்மையிலும் இருக்கிறது. செல்வந்தரும் லாசரும் (லூக் 16:19-31) என்ற கதையில் இயேசு இந்த உண்மையை மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். ஏழை ஒருவர் பணப்பற்றால் பேராசை பிடித்தவராகவும், செல்வர் ஒருவர் பணப்பற்றின்றி இறைவனில் தங்கி வாழும் ஏழையாகவும் அவரவர் மனத்தாலே மாறலாம். செல்வம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் வானகத் தந்தை ஒருவரைமட்டும் நம்பி, அவரிலேயே தங்கி வாழ்வோரையே விவிலியம் ஏழைகள் என்று அழைக்கிறது. இவர்களையே இயேசுவும் ஏழைகள் என்று குறிப்பிடுகிறார். ஏழைகளின் உள்ளத்தோர் பேறுபெற்றோர். ஏனெனில் இறையாட்சி அவர்களின் சொத்து (மத் 5:3) என்ற இயேசுவின் இக்கூற்று ஒருவர் வானகத் தந்தையின் பராமரிப்பில் நம்பிக்கைக்கொண்டு இறையாட்சிக்காகப் பகிர்ந்து தன்னை ஏழையாக ஆக்கினால், அவர் இறையாட்சி என்ற மாபெரும் செல்வத்துக்கு உரிமையாளர் ஆகிறார் என்பதை உறுதிப்படுத்துகிறது.



ஆக்கம்
அருட்பணி. பிலிப் IVD

## அற்புதப் பொன் மொழிகள்

* தீயவற்றை வேண்டுமென்று விரும்பிச் செய்யாதே பிறர் வேண்டினாலும் செய்யாதே
* மனம் அறிய உண்மையாக வாழ்வது நேர்மையான வாழ்வாகும்.
* பிரார்த்தனை என்பது கடவுளிடம் ஏதாவது கேட்டதல்ல, அது ஆன்மாவின் ஏக்கமாகும்.
* மௌனத்தின் மூலமாகதான் இறை அனுபவத்தை அடைய முடியும்.
* உயர்ந்த எண்ணம் கொண்டவர்களுக்கு தனிமை என்பதே இல்லை.
* நமது அறிவுத்திண்மையும் செயல்படும் திறனும் வளர்வது அன்பினாலேயே
* நன்றியுள்ள மனிதன் எதை சொன்னாலும் நம்பலாம். ஏனெனில் அவள் துரோகம் செய்யமாட்டான்.
* உலகிலேயே மிகவும் கசப்பான பொருள் உண்மை.
* ஆணவமும், அகம்பாவமும் என்றாவது ஒருநாள் நமக்கு எதிரியாக நிற்கும்.
* இலட்சியம் இல்லாத வேலை எண்ணெய் இல்லாத விளக்குக்கு சமம்.

# நாம் உலகை அலங்கரிக்கும் இயேசுவின் சிறுமலர்களாவோம்.



'இவ்வாறே உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க! அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள்' (மத் 5:16)

**அருட்பணி. ரெஜினோல்ட் சபரமாது, தேசிய இயக்குனர். திருப்பாலத்துவ சபை**

தன்னைத் தேடி வந்தவர்களிடம் இயேசு மலைப்பொழிவில் திருவாய் மலர்ந்து உரைத்தது; "நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள்..... நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்" (மத் 5:13-14) பின்னர் அவர் அவர்களிடம் கேட்கிறார். "ஆனால் உப்பு உவர்ப்பற்றுப் போனால் எதைக் கொண்டு அதை உவர்ப்புள்ளதாக்க முடியும்? (மத் 5:13B). அது வெளியில் கொட்டப்பட்டு மனிதரால் மிதிப்படும். வேறு ஒன்றுக்கும் உதவாது என அவர் தொடர்ந்து சொல்கிறார். மீண்டும் அவர் அவர்களிடம், "எவரும் விளக்கை ஏற்றி மரக்காலுக்குள் வைப்பதில்லை. மாறாக விளக்குத் தண்டின் மீதே வைப்பர். அப்பொழுதுதான் அது வீட்டிலுள்ள அனைவருக்கும் ஒளிதரும்" (மத் 5:15 என்கிறார். ஆம் அது அப்படியே "இவ்வாறே உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க! அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள்" (மத் 5:16) என்பதே இயேசு நமக்குத் தரும் படிப்பினையாகும். முதியவர்கள் மற்றும் சின்னஞ் சிறியவர்களாகிய நமது பிள்ளைகள் ஆகிய நம் அனைவருக்கும் ஆண்டவர் அருளும் அறிவுரையை நினைவுப்படுத்திக் கொள்வோமாக.

இந்த வருட திருப்பாலத்துவ சபை ஞாயிறு தினம் மற்றும் இந்த முழு வருடத்திற்குமான கருப்பொருள் பின்வருமாறு அமைவுறுகிறது. "நாம் உலகை அலங்கரிக்கும் இயேசுவின் சிறுமலர்கள் ஆவோம்" தமது உலகையும் நமது சமூகத்தையும் மக்கள் வாழ்வதற்கான ஒரு சிறந்த இடமாக ஏற்படுத்துவதற்கான ஒரு அழைப்பினை ஆண்டவர் தாமே நமக்கு வழங்கியுள்ளார். நாம் அனைவரும் சிறப்பாக நமது சின்னஞ் சிறார்களும் தங்களுடைய அழைப்பையும் பொறுப்புணர்வையும் உணர்ந்து தங்களுடைய நறுமணத்தையும், ஆனந்தத்தையும் தம் சூழமைவில் பரப்ப வேண்டும் என்பதை இந்த கருப்பொருளானது நினைவுப்படுத்துகிறது.

நாம் வாழும் இந்த உலகும், இச்சமூகமும் சூழமைவும் தற்போது அழகினை இழந்து மாசுபட்டு நிற்கிறது. கெட்ட மொழிப் பிரயோகமும், நடத்தை நிகழ்வுகளும் எங்குமே நிறைந்துள்ளன. பொய்மையும் உண்மையற்ற தன்மைகளும் உலகை ஆளுகின்றன. இவற்றிற்கு நமது சின்னஞ் சிறார்கள் கூட உட்படுத்தப்படுகின்றனர். கையூட்டும் (இலஞ்சமும்) நெறிப்பிறழ்வும் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் ஏழை பணக்காரர் எனும் இரு நிலையினரிலும் காணப்படுகின்றன. சிறுவர்கள் கூட இந்த சந்தர்ப்பத்தில் குருக்கள், துறவியர், பெற்றோர்கள், முதியவர்களாகிய நாம் அனைவரும் இயேசுவின் பூந்தோட்டமாக திகழ்ந்து உலகையும், சமூகத்தையும் அழகுள்ளதாக உருவாக்கும் நமது சிறார்களை பாதுகாத்து கட்டிக்காக்க வலம் வருவது அவசியமாகும். நடைமுறை சமூகத்தின் தப்பறையான படிப்பினைகளாலும் தீய முன்னுதாரணங்களினாலும் வழி மாறிச் செல்ல முற்படும் சிறுவர்களை தடுத்து பாதுகாப்பது நமது கடமையாகும்.....

*தொடர்ச்சி 15ஆம் பக்கம்*




## 2014ஆம் ஆண்டுக்கான திருப்பாலர் மறைபரப்பு ஞாயிறு தினத்திற்கான நிதிச்சேகரிப்பு

| மறைமாவட்டம் | தொகை |
|---|---|
| அநுராதபுரம் | 67,660/- |
| பதுளை | 82,650/- |
| சிலாபம் | 5,630,62/- |
| கொழும்பு | 1,725,655.75/- |
| காலி | 88,292/- |
| யாழ்ப்பாணம் | 258,492/- |
| கண்டி | 295,113/- |
| குருநாகலை | 216,443/- |
| மன்னார் | 265,166/- |
| இரத்தினபுரி | 100,177/- |
| திருகோணமலை | 90,000/- |
| மட்டக்களப்பு | 84622/- |

## திருப்பாலத்துவ சபை – தேசிய செயலகம்.

# பிள்ளைகளின் உரிமைகள்

1. 18 வயதுக்குட்பட்ட ஒவ்வொருவரும் பிள்ளையாவர். எல்லா உரிமைகளையும் ஒவ்வொரு பிள்ளையும் அனுபவித்தல் வேண்டும்.
2. எல்லாப் பிள்ளைகளுக்கும் அவர்களின் வயது, பால், இனம், நிறம், சாதி, மொழி அல்லது மதம் எவ்வாறிருப்பினும் இந்த உரிமைகள் உள்ளன.
3. பிள்ளையின் பரிணாம வளர்ச்சித் திறனுக்கு ஏற்றவாறான நெறிமுறைகளைப் புகட்டுவதில் பெற்றோருக்கும் குடும்பத்தினருக்கும் உள்ள உரிமைகளையும் பொறுப்புக்களையும் கருத்திற் கொள்ள வேண்டும்.
4. பிள்ளைகள் உயிர்வாழும் உரிமையுள்ளவர்கள் என்பதை ஒவ்வொருவரும் அங்கீகரித்தல் வேண்டும். பிள்ளைகளின் உய்வையும் வளர்ச்சியையும் உறுதி செய்தல் வேண்டும்.
5. அரசாங்கம் குழந்தைகளின் ஆள் அடையாளத்தைப் பாதுகாத்தல் வேண்டும். அவசியமானால் அரசாங்கம் குழந்தையின் அடையாளம் தொடர்பான அடிப்படை அம்சங்களை (பெயர், தேசியம், குடும்ப உறவுகள் ஆகியவற்றை) மீள நிரூபித்தல் வேண்டும்.
6. பிள்ளைகளை, அவர்களின் சிறந்த நலனை முன்னிட்டு அல்லாமல் (புறக்கணிப்பு, துஷ்பிரயோகம் போன்ற காரணங்களை முன்னிட்டு அல்லாமல்) மாற்றும் படி பெற்றோரிடமிருந்து பிரித்தல் ஆகாது. பெற்றோர் பிரிந்து வாழ முடிவு செய்யும் பட்சத்தில் பிள்ளை இருவரில் ஒருவரை அல்லது இருவரையும் பிரிந்து வாழுமானால் இரு பெற்றோருடனும் தொடர்பு வைத்திருக்கும் உரிமை அதற்கு உண்டு.
7. பெற்றோரில் ஒருவரால் அல்லது வேறொருவரால் பிள்ளை, கடத்தப்படுதலை அல்லது பலாத்காரமாக வெளிநாட்டில் தடுத்து வைக்கப்படுதலை அரசாங்கம் தடுக்க முயல்வதுடன் அவர்களை மீட்பதற்கும் ஒத்தாசை செய்தல் வேண்டும்.

*தொடர்ச்சி 15ஆம் பக்கம்*

# பாப்பிறை திருப்பாலர் சபை



1843ஆம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டில் நன்சி என்னும் ஊரில் ஆயர் சாள்ஸ் டீ போபின் ஜான்சன் என்பவர் இச்சபையை ஆரம்பித்தார். இளம் பராயத்திலிருந்தே இயேசுவை ஆழமாக அறியவும், கிறிஸ்தவ நற்பண்புகளை வாழ்வில் கடைப்பிடிக்கவும், சிறுவர்களை வழிநடத்தி அவர்களின் விசுவாச வாழ்வை ஆழப்படுத்துவதுடன், சிறுவர்களைக் கொண்டு சிறுவர்களுக்கு உதவி வழங்குவதன் மூலம் பகிர்ந்து வாழும் மனப்பான்மையை இவர்கள் உள்ளத்தில் வேரூன்றச் செய்வதுமே இவரின் முக்கிய குறிக்கோளாக இருந்தது. இதன் வழியாக சிறுவர்களை இயேசுவின் சிறிய மறைத்தூதர்களாக மாற்ற வேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்டிருந்தார்.

தேசிய இயக்குனர்
பாப்பிறை மறைப்பரப்புச் சபைகள்
இல. 19. பல்கம் இடம்,
கொழும்பு - 08
தொலைபேசி / தொலை நகல்
0112685673
மின்னஞ்சல் : ndpms@sltnet.lk
இணையம் : www.pontificalmissionlk.org.

# திருச்சபையின் புனிதரா எப்படி?

**‘ஒவ்வொரு குழந்தையும், நல்ல பிள்ளைத் தான் மண்ணில் பிறக்கையிலே அவர்கள் நல்லவர் ஆவதும், தீயவர் ஆவதும் அன்னையின் வளர்ப்பினிலே’.**



இந்த வரிகளைப் போல நம் அனைவரையும் புனித வாழ்வு வாழ அழைக்கின்றது நமது தாய் திருச்சபை. நமது தாய் திருச்சபையில் பல்லாயிரக்கணக்கான புனிதர்கள் உள்ளனர். இந்த புனிதர்கள் அனைவரும் கத்தோலிக்க திருச்சபையால் அதிகாரப்பூர்வமாக இந்த நிலைக்கு உயர்த்தப்பட்டவர்கள். நமது கத்தோலிக்க திருச்சபையில் இவர்களை புனிதர்கள் என்று அழைக்கின்றோம். இவ்வாறு புனிதராக அறிவிக்கும் போது திருச்சபையில் மேற்கொள்ளும், பல்வேறு நிலைகள் அல்லது முறைகள் (Process) என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?

திருச்சபையில் ஒருவரை புனிதராக அறிவிக்கும் முன் மேற்கொள்ளும் முறையை ஆங்கிலத்தில் “Canoization” என்று அழைப்பர். இதுவரை 3000 புனிதர்களுக்கும் மேற்பட்டவரை திருச்சபை உருவாக்கியுள்ளது. திருச்சபையின் வரலாற்றில் தொடக்கத்தில் பல நூற்றாண்டுகளாக ஒருவரை புனிதராக திருநிலைப்படுத்தும் உரிமை பொதுநிலையினரின் விருப்பத்தை மட்டுமே கொண்டிருந்தது. 10ம் நூற்றாண்டிற்குப் பிறகு திருத்தந்தை 15ம் அருளப்பர் கி.பி 993ஆம் ஆண்டில் ஆக்கபூர்வமாக இதனை ஓர் திருச்சபையின் அங்கீகரிக்கப்பட்ட முக்கிய பணியாக திருச்சபை சட்டநூலில் (எண் 1403ல்) முறைப்படுத்தி செயல்முறைப் படுத்தினார்.

திருச்சபை புனிதராக்கப்படும் பணி முறைப்படுத்தப்பட்ட பின்னரும், பல்வேறு மாற்றங்களைக் கண்டது. குறிப்பாக கடந்த ஆயிரம் ஆண்டுகளாக பல புதிய விதிமுறைகளும், நிபந்தனைகளும் மேற்கொள்ளப்பட்டது. இறுதியாக மறைந்த நமது முன்னாள் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் பல்வேறு புதிய முறைகளை நியாயப்படுத்தினார். குறிப்பாக அவர் பல்வேறு நிலைகளைக் கொண்ட இந்த முறையில் “Devil;s Advocate” எனப்படும் இவர்கள் புனிதராக அறிவிக்கும் நபரின் சாட்சிகளுக்கும், விவாதங்களுக்கும் எதிரே வாதாடுபவர்கள்.

### புனிதராக்கப்படுதலின் போது....

1. ஒருவரை புனிதராக்கப்படுதலின் முதன்மையான காரணம் அந்த புனிதரை வணக்கம் செய்தல். (Veneration) மற்றும் அவரிடம் பரிந்துரை செபம் செய்தல் (Intercession) ஆகும்.

2. புனிதரின் பெயர் திருச்சபையின் புனிதர்களின் பட்டியலில் சேர்க்கப்படும்.

3. புனிதருக்காக ஒரு நினைவு நாள் தேர்ந்தெடுக்கப்படும்.

4. திருப்பலியில் நினைவுகூர்ந்து கொண்டாடுவதும், பொது செபங்களில் அவர் வழியாக மன்றாடுவதும் செய்யப்படும்.

5. அவரின் திருப்பண்டத்தை (Relic) முத்தம் செய்து வணக்கம் செய்யப்படும்.

6. தலைக்கு பின்புறத்தில் ஒளி வட்டத்தோடு புனிதர்களின் படங்களை வரைதல்.

### புனிதர் பட்டம் கொடுப்பதற்காக ஐந்து நிலைகளைக் கொண்ட வழிமுறைகள்.

1. ஒரு இறந்த கிறிஸ்தவருக்கு ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகுதான் புனிதர் பட்டம் கொடுப்பதற்கான வழிமுறைகள் தொடங்கப்படும். இது குறிப்பிட்ட மறைமாவட்ட ஆயரின் மேற்பார்வையில் அந்த நபரின் வாழ்க்கை நெறிகளையும், பண்புகளையும் ஆய்வு செய்து வத்திக்கானில் உள்ள திருத்தந்தையின் மேற்பார்வையில் உள்ள குழுவிற்கு அனுப்பப்படும். இந்த முதல் நிலையின் இறுதியில் “Servant of God” இறைவனின் திருப்பணியாளர் என்று அழைக்கப்படுவார்கள்.

2. இறை வல்லுனர்களும், கர்தினால்களும் கொண்ட குழு நபரின் வாழ்க்கையை பல்வேறு வகையில் மதிப்பீடு செய்வார்கள். அவரின் பொது வாழ்க்கையில் இறை நம்பிக்கை, பண்புகள், பக்தி முயற்சிகள், ஒழுக்க நெறிகள் மற்றும் அன்பு நெறிகளை ஆய்ந்தறிந்து மதிப்பிடுவார்கள்.

3. இவரது வாழ்வு அனைவருக்கும் முன்மாதிரியான வாழ்வாக உள்ளதா என்பதை ஆலோசனை செய்வார். இந்த நிலையின் இறுதியில் வணக்கத்துக்குரியவர் “Venerable” என்று அழைக்கப்படுவார்.

4. இந்த இரண்டு நிலைகளிலும், இந்த நபரின் பெயரில் ஆலயம் கட்டவோ, விழா நாள் எடுக்கவோ அனுமதி இல்லை. நான்காது நிலையில் அருளாளர் (Blessed) பட்டத்திற்கு உயர்த்தப்படுவார்கள். இதற்கு “நம்புவதற்கு தகுதியானவர்” (worthy of Belief) என்று பொருளாவர். இந்த முறையை ஆங்கிலத்தில் (Process of Beatification) என்று அழைப்பர். இந்தப் பட்டம் அளிக்க அந்த நபரின் பெயரில் ஓர் புதுமை நடந்திருக்க வேண்டும். (Posthumous Miracle) இந்த புதுமையை ஆய்வு செய்த பின் அருளாளர் பட்டத்தை (Beatified as Blessed) திருத்தந்தை அறிவிப்பார்.

5. இறுதியாக இந்த அருளாளர் பட்டம் பெற்றவருக்கு புனிதர்பட்டம் (Canoization) கொடுக்க வேண்டுமென்றால் மற்றொரு புதுமை நிருபிக்கப்பட வேண்டும். இந்த புதுமை எல்லா மருத்துவர்களால் சோதனை செய்த பின் அங்கீகரிக்கப்பட வேண்டும் இதன் பின் பல்வேறு விவாதங்களுக்குப் பின் திருத்தந்தை புனிதர் பட்டத்தை அதிகாரப்பூர்வமாக அறிவிப்பார்.

புனிதர் பட்டம் அளித்த பின் கத்தோலிக்க திருச்சபை இப்புனிதரை வணக்கம் செய்யலாம். இந்த புனிதர் பட்டம் கொடுக்கும் அதிகாரம் திருத்தந்தைக்கு மட்டுமே உள்ளது. இது ஒரு தூய ஆவியின் செயல் இவ்வாறு புனிதர் பட்டம். கொடுத்தபின் திருவழிப்பாட்டின் கால அட்டவணையில் இப்புனிதருக்கான நாள் தரப்பட்டு கொண்டாடப்படும். இவ்வாறாகவே புனித யோசேவ்வாஸ் அடிகளாரும் 14.01.2015 அன்று பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களால் புனிதராக உயர்த்தப்பட்டார். இவர் வழியாக பல புதுமைகள் நடந்தேறியுள்ளன. இன்னும் நடந்துக் கொண்டிருக்கிறதை பலரும் கூறுகின்றார்கள். அவரின் புதுமைகள் அடுத்த இதழில்




# மாதிரிக் குடும்பம்

சரிந்து போகாப் புதுமைக்குள் சரவெடிக் கூட்டும் சமுதாயத்தின் அடிப்படை குடும்பம். காலத்தின் ஓட்டத்தில் நாகரீகத்தின் வளர்ச்சியில் பண்பாட்டு மலர்ச்சியில் மனித குலத்துக்குப் பரிசாக வாய்த்ததுதான் குடும்பம். இன்று குடும்பம் என்னும் கட்டமைப்பு உடைந்து காணப்படுகிறது. பரம்பரைப் பரம்பரையாகப் பேணிப் பாதுகாக்கப்பட்ட கூட்டுக்குடும்ப மாளிகை சிதைந்து தனிக்குடும்பம் பெருகிக் கொண்டிருக்கிறது. ஒரே வீட்டில் ஒவ்வொரு வீடாக வாழும் சூழல் அதிகம். இதற்கு மாறாக ஆஞ்சலோவின் குடும்பம் திகழ்ந்தது. குறிப்பாக, உறவிற்கும், உழைப்பிற்கும் ஆன்மீக வாழ்விற்கும் முன்னுதாரணமாகத் திகழ்ந்தது அக்குடும்பம்.

## உறவில் முன்மாதிரி

நிலா வெளிச்சத்தில் எப்போதும் ஒன்றாகக்கூடி திண்ணையில் அமர்ந்து பாட்டி கதை சொல்ல தாத்தா கதையின் வேடனாக மாறி ஏற்பட்ட சண்டைக்காட்சி சுகம்தான்!. நிலாவைக் காட்டி அம்மா சோறு ஊட்ட நான் உண்ட உணவு சுவைதான்! என் அம்மா மடியில் தங்கை தூங்க, சண்டையிட்டுக்கொண்டு என் பாட்டி மடியில் நான் தூங்க, வந்த தூக்கம் சுகம்தான்!நான் கேட்ட பொருளை அப்பா வாங்கித்தர மறுக்க, இதைப்பார்த்துக் கொண்டிருந்த என் சித்தப்பா அதை மறுநாள் வாங்கித் தர அந்தப் பொருள் கொடுத்த மகிழ்ச்சி சுகம்தான்!. நாள் பள்ளிக்குச் செல்ல அடம்பிடிக்க, யாருக்கும் தெரியாமல் பாட்டி என் கையில் பைசாவைத் திணிக்க மகிழ்ச்சியோடு பள்ளிக்குப் புறப்பட்ட நாட்களும் சுகம்தான்!. கடைசி மணி ஓசை கேட்டதும் வேகமாக ஓடி, காத்திருக்கும் தாத்தாவுடன் கால்நடையாக நடந்து வந்த நாட்களும் சுகம்தான்!. அத்தனை சுகங்களையும் மொத்தமாய் இழந்து கொண்டிருக்கிறது. இன்றைய நாகரீக உலகம்.

21ம் நூற்றாண்டின் அநாகரீக மனப்பாங்கின் முதலிடத்தில் இருப்பது "தனி வீடு - தனிக்குடித்தனம் - ஒரு குழந்தை" எனும் நிலைப்பாடு! தமிழர்களின் தனித்துவமாயிருந்த கூட்டுக்குடும்ப மாளிகையும், சகோதர சகோதரிகளின் பாசமும் இன்று மறைந்து கொண்டிருக்கிறது. தந்தை - தாய் - ஒரே மகன் (ள்) எனும் தனிக்குடும்ப வாழ்வில் நாம் மட்டும் விலகி நிற்பதில்லை. நம்மோடு இணைந்து அன்பு, பண்பு, நேசம், பாசம், பகிர்வு என்னும் வாழ்வியல் மதிப்பீடுகளும் மன்னித்து விடப்படுகின்றன.

# புனித இருபத்தி மூன்றாம் ஜோன்




ஆஞ்செலோவின் குடும்பம் இன்றைய அநாகரீகச் சூழலுக்கு மாறாகவே இருந்தது. குழந்தைகள் கடவுளின் கொடை என்பதை நன்கு உணர்ந்திருந்தனர் ஆஞ்செலோவின் பெற்றோர். எனவேதான் 13 குழந்தைகளைப் பெற்றெடுத்த பெருமை இவர்களுடையது.

## புனிதரின் உடன்பிறப்புகள்

- மரியா கத்தரீனா (1877 - 1883)
- தெரேசு (1879 - 1954)
- அன்சீல்லா (1880 - கார்த்திகை 11, 1953)
- பிரான்செஸ்கோ சவேரியோ (1883 - 1976)
- மரியா எலீசா ( 1884 -1955)
- அஸ்ஸீந்தா கசீல்தா (1886 - 1980)
- தொமேனிக்கோ ஜீசேப்பே (22 மாசி, 1888 - பங்குனி 14, 1888)
- அல்ஃப்ரேடோ (1889 - 1972)
- ஜோவான்னி பிரான்செஸ்கோ (1891 - 1956)
- என்ரீக்கா (1893 - 1918)
- ஜீசேப்பே லூயிஜி (1894 - )
- லூயிஜி ( 1896 - 1898)

தாய்வழி பாரம்பரியம் இவர்களுடையது. கூட்டுக்குடும்பம் இவர்களது குடும்பச் சொத்தாக மிளிர்ந்தது. ஆஞ்செலோவின் குடும்பத்தில் மொத்தம் 31 நபர்கள். ஆஞ்செலோவின் தந்தை ஜியோவான்னி பாத்தீஸ்தா ரொன்கால்லியும், ஜியோவான்னியின் தாய்மாமன் சவேரியோ இருவரும் குடும்பத்தின் மூத்த உறுப்பினர்களாக இருந்து குடும்பத்தை வழிநடத்தி-னார்கள். சவேரியோ குடும்பத்தை வழிநடத்துவ-தற்காகவே திருமணம் செய்து கொள்ளாதவர். என்ன அளப்பரிய தியாகம்!.

குடும்பமே குழந்தையின் முதல் பல்கலைக்-கழகம். பெற்றோரே அதன் முதல் ஆசிரியர். ஒரு குழந்தை தன் வாழ்வுக்குத் தேவையான அறிவு ஆற்றல்களைத் தன் குடும்பத்திலிருந்தே கற்றுக்கொள்கிறது. எனவே தான் "தாயைப்போல பிள்ளை, நூலைப்போல் சேலை" என்பார்கள். சவேரியோ ஆஞ்செலோவுக்கு குடும்பத்தை முன் நின்று வழிநடத்தியவர் மட்டுமல்ல, மாறாக ஆஞ்செலோவுக்கு அடிப்படை செபங்களை, இறை ஞானத்தை, மறைபோதகத்தைக் கற்றுக்கொடுத்த ஆசிரியர், ஞானத்தந்தை என்றால் மிகையாகாது.

தொடரும்...

# சுதந்திரம்



- பொது விமர்சனத்துக்கு அச்சப்படாமல் அடுத்தவரின் கைப்பாவையாக மாறாமல் போதிய சிந்தனையும், சுயமரியாதையும் பெற்றிருப்பவர்களே சுதந்திர மனிதர்கள். **– அம்பேத்கர்.**
- ஆழமான அழுத்தமான ஆக்கபூர்வமான கல்வியின் அடிப்படையில் தான் மனித குலத்தின் விடுதலை அடங்கியுள்ளது. **– பாரதிதாசன்**
- அடிமைகளாக இருக்க யார் விரும்பவில்லையோ! அவர்கள் மற்றவர்களை அடிமைகளாக்கக் கூடாது. மற்றவர்களுக்கு சுதந்திரம் வழங்க விரும்பாதவர்கள், தாங்கள் சுதந்திரத்துடன் வாழத் தகுதியற்றவர்கள். அப்படி அவர்கள் சுதந்திரத்துடன் வாழ்ந்தாலும் அந்த சுதந்திரம் வெகு காலம் நிலைக்காது. **– ஆபிரகாம் லிங்கன்**
- கேட்டுப் பெறுவது யாசகம், எடுத்துக் கொள்வது தான் விடுதலை **– அம்பேத்கர்.**

# வர்ணம் தீட்டுக.





ஆக்கம் : ஸ்ரெபான் பர்னாந்து, தூய திரித்துவ கல்லூரி, கண்டி



# பெற்றோருக்கு செய்ய வேண்டிய பணிகள்

- அன்பு செய்
- மரியாதை செலுத்து
- கீழ்ப்படி
- பணிகளில் உதவி செய்
- ஆலோசனை கேள்



- முதுமையில் ஆதரி
- பின்பற்று
- பணிந்து நட
- அவர்களுக்காக இறைவனிடம் செபி
- மனம் நோகச் செய்யாதே
- விருப்பத்தை உணர்ந்து நட

# பீடப்பணியாளர்களே இது உங்களுக்காக!



# அவருக்காய் பணிபுரிய...



3

## பீடப்பணியாளர்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை

### திருவழிபாட்டு உடைகளும் காலங்களும்

**1. வெண்ணிற உடை :**

பாஸ்கா காலம், ஆண்டவரின் பிறப்புக் காலம், ஆண்டவரின் விழாக்களிலும் நினைவு நாட்களிலும், தூய கன்னி மரியாள், வானதூதர், மறைசாட்சியரல்லாத புனிதர்கள் ஆகியோரின் விழாக்களிலும், அவர்களது நினைவு நாள்களிலும், புனித பவுல் மனந்திரும்பிய விழா (தை 25), இராயப்பரின் தலைமைப் பீட விழா (மாசி 22), திருமுழுக்கு யோவானின் விழா (ஆனி 24), அனைத்து புனிதரின் விழா (கார்த்திகை 01) மற்றும் நற்செய்தியாளரான புனித யோவான் விழா (மார்கழி 27) ஆகிய நாள்களிலும் வெண்ணிற ஆடையைத் திருவழிபாட்டு நிகழ்வுகளில் பயன்படுத்த வேண்டும்.

**2. சிகப்பு நிற உடை :**

ஆண்டவருடைய பாடுகளின் ஞாயிறு, பெரிய வெள்ளிக்கிழமை, பெந்தகோஸ்தே ஞாயிறு, ஆண்டவருடைய பாடுகளைச் சார்ந்த கொண்டாட்டங்கள், அப்போஸ்தலர்கள், நற்செய்தியாளர்கள் மற்றும் புனித மறைசாட்சியர்களின் விழாக்கள்.

**3. பச்சை நிற உடை :**

ஆண்டின் பொதுக்காலத் திருப்பலி

**4. ஊதா நிற உடை :**

திருவருகைக்காலம், தவக்காலம் மற்றும் இறந்தோர் திருப்பலி

**5. கருப்பு நிற உடை :**

இறந்தோர் திருப்பலி

**6. ரோஸ் நிற உடை :**

திருவருகைக்காலம் 3ம் ஞாயிறு மற்றும் தவக்காலம் 4ம் ஞாயிறு

**பணிவாழ்வு தொடரும்...**

## திருவழிபாட்டில் பயன்படும் திருப்பண்டங்கள்

| எண் | ஆங்கிலப் பெயர் | தமிழ்ப்பெயர் |
|---|---|---|
| 1 | Alb | நீண்ட வெள்ளாடை |
| 2. | Altar | திருப்பீடம் |
| 3. | Altar cloth | பலிபீடத் துகில் |
| 4. | Altar server | பீடப்பணியாளர் |
| 5. | Ambo | வாசக மேடை |
| 6. | Aspergillum / Sprinkler | தீர்த்தம் தெளிக்கப் பயன்படும் கலன் |
| 7. | Benediction | நற்கருணை ஆசீர் |
| 8. | Blessed Sacrament | திவ்விய நற்கருணை |
| 9. | Boat | சாம்பிராணி வைக்கும் கலன் |
| 10. | Candles | மெழுகுவர்த்திகள் |
| 11. | Cantor | வாசகர் |
| 12. | Cassock | நீண்ட வெள்ளைத் துகில் |
| 13. | Censer, thurible | தூபக் கலன் |
| 14. | Chalice | திரு இரசக் கிண்ணம் |
| 15. | Chaple | சிற்றாலயம் |
| 16. | Church | ஆலயம் |
| 17. | Ciborium (Plural-Ciboria) | திரு அப்பக் கிண்ணம் |
| 18. | Cincture | இடைக்கச்சை |
| 19. | Communion Plate | நன்மைத் தட்டு |
| 20. | Corporal | திருமேனித் துகில் |
| 21. | Credence table | திருவழிபாட்டுப் பொருட்களை வைக்கும் மேசை |
| 22. | Cross | திருச்சிலுவை |
| 23. | Vestments | திருஉடைகள் |
| 24. | Cruets | இரசம், தண்ணீர் உள்ள குவளைகள் |
| 25. | Dalmatic | திருத்தொண்டர் அணியும் உடை |
| 26. | Finger towel / Lavabo bowl | கைதுடைக்கும் வெள்ளைத்துகில் |
| 27. | Flower Vase | பூ வைக்கும் பாத்திரம் |
| 28. | Funeral Pall | சவப்பெட்டியை மறைக்கும் வெள்ளைத் துகில் |
| 29. | Holy Oil | திரு எண்ணெய் |
| 30. | Holy water bucket | தீர்த்த வாளி |
| 31. | Host | அப்பம் |
| 32. | Humeral Veil | தோள் துகில் |
| 33. | Incense | சாம்பிராணி |
| 34. | Lectern | வாசகமேடை |
| 35. | Lectionary | வாசகப் புத்தகம் |
| 36. | Lunette | நற்கருணைச் சிமிழ் |
| 37. | Missal / Sacramentary | திருப்பலிப் புத்தகம் |
| 38. | Mitre | ஆயர் ஆணியும் தலைப்பாகை |
| 39. | Monstrance | நற்கருணை கதிர் பாத்திரம் |
| 40. | Pall | திருஅட்டை |
| 41. | Pascha Candle | பாஸ்கா மெழுகுதிரி |
| 42. | Pastoral Staff / Crosier | செங்கோல் |
| 43. | Paten | கிண்ணம் |
| 44. | Pitcher / bowl | கை கழுவப் பயன்படும் பாத்திரம் |
| 45. | President's chaie | திருப்பணியாளர்களின் நாற்காலி |
| 46. | Purificator | திருக்கிண்ணத்துணி |
| 47. | Pyx | நோயுற்றோருக்கு திவ்விய நற்கருணை எடுத்துச் செல்லும் சிறிய பேழை |
| 48. | Ritual | மந்திரிப்பதற்காகப் பயன்படும் புத்தகம் |
| 49. | Sacristian | வேதியர் |
| 50. | Sacristy | திருப்பண்ட அறை |
| 51. | Sanctuary | பீட முற்றம் |
| 52. | Sprinkler | தீர்த்தக் குவளை |
| 53. | Stole | தோள் துகில் |
| 54. | Surplice | சிறிய வெள்ளாடை |
| 55. | Tabernacle | நற்கருணைப் பேழை |

## மாணவர் ஒளி



## உண்மை



- நல்லொழுக்கம் என்பது ஒரு மரம், புகழ் என்பது அதன் நிழல், நிழல் நமது நினைப்பு.

  *- ஆபிரகாம் லிங்கன்*

- குழம்பிலே சுழன்று வரும் அகப்பைக்கு குழம்பின் சுவை தெரியாது. வாழ்நாள் முழுவதும் அறிவாளிகளோடு பழகினாலும் முட்டாள்களுக்கு உண்மை புலப்படாது.

  *- புத்தர்*

- நல்ல நண்பரைப் பெற உண்மை நண்பராக இரு.

  *- எமர்சன்*

- உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது; அதை யாராலும் மூடி மறைக்க முடியாது.

  *- மில்டன்*

- உடல் அழகைவிட உள்ளத்தின் அழகே உண்மை

  *- சாக்ரடீஸ்*

## கனவல்ல நிஜம்

ஒருநாள் இரவில்
தனிமையில்
உறங்கினேன்
உறக்கத்தில்
ஒரு கனவு
நான் ஒரு
பாலத்தைக்
கடக்கிறேன்
பாலத்தின் கீழ்
பெருக்கெடுத்து
ஓடும்
பெருவெள்ளம்!
பாலத்தின்
முடிவில்
சிறிதளவு
இடைவெளி...
தாண்டிச் செல்ல
முயல்கின்றேன்
இயலவில்லை!
திடீரென்று
ஒரு ஆடு
பாலத்தின்
இடைவெளியில்
படுத்து
'என்னைத்
தாண்டிச் செல்'
என்கிறது!
ஆட்டைமிதித்து
அக்கரை
செல்வதா என்று
சிறு குழப்பம்!
ஆடு மீண்டும்
'தாண்டிச் செல்'
என்றது!
'என் பாரத்தை நீ
தாங்குவாயா? சிறு



ஆடே' என்றேன்
ஆடு சொன்னது....
'மகனே உன்னை மட்டுமல்ல...
இந்த உலகத்தையே தாங்கும்
செம்மறி நான்தான்' என்று
வியந்து விழித்தேன்!
விழித்துக் கூட
வியர்வை காயவில்லை!
கண்ணீரும் ஓயவில்லை!
'இறைவா உமக்குப்
புகழ்' என்றேன்.



# இனிமையான இல்வாழ்விற்கு...!

3



# மன ஒன்றிப்பும் மகப்பேறும்

திருமணத் தயாரிப்புக் கருத்தரங்கில் கலந்துகொள்ளவரும் மணமக்களிடம், "நீங்கள் ஏன் திருமணம் செய்துகொள்ள விரும்புகின்றீர்கள்" என்று கேட்டால், பலரும் பல விதமான பதில்களைக் கூறுகின்றார்கள். அவற்றுள் நான்கு பதில்களை மட்டும் பார்ப்போம்.

முதல் நபர் : "எனக்கென்று ஒருத்தி வேண்டாமா?"

2வது நபர் : "எனக்கு உடம்பு முடியலைன்னா கை, காலைப் பிடிச்சு அழுக்கிவிடுவதற்கு ஒருத்தி வேண்டாமா?"

3வது நபர் : "மனுஷனுக்கு ஆசாபாசம் என்று ஒன்று இருக்குதில்லே, அதை எப்படி தீத்துக்கிறது?"

4வது நபர் : "விண்ணரசிற்கு மக்களைச் சேர்க்க நான் கல்யாணம் பண்ணிக்கிறேன்".

மேற்கூறப்பட்ட இந்நான்கு பதில்களையும் அலசிப் பார்த்தோமேயானால், முதலாவது நபரின் எண்ணப்படி, திருமணம் மூலம் ஒருவன் ஒருத்தியைத் தனது உடைமையாக்கிக் கொள்கிறான். மனைவி என்பவள் கணவனுடைய பல்வேறு உடைமைகளுள் ஒன்றாகவே பழைய ஏற்பாட்டில் கருதப்பட்டாள்.

"உன் அயலான் வீட்டையோ, மனைவியையோ, வேலைக்காரன் - வேலைக்காரியையோ, மாட்டையோ, கழுதையையோ விரும்பாதிருப்பாயாக" (வி.ப 20:17) ஒருவனுடைய மாடு, கழுதையைப் போல் மனைவியும் அவனுடைய உடைமை.

இரண்டாவது நபரின் எண்ணப்படி, மனைவி என்பவள் கணவனுக்கு வேலைக்காரி, கணவனுக்குச் சமைத்துப்போடுவதும், துணிதுவைத்துக் கொடுப்பதும் கணவனின் கை, கால்களைப் பிடித்து அழுக்கிவிடுவதும் மனைவியினுடைய பணிகள். சுருக்கமாகச் சொல்லப்போனால், மனைவி கணவனுக்குப் பணியாள்.

நான்காவது நபரின் பதில் சற்று வித்தியாசமானது. அவரின் எண்ணப்படி, திருமணத்தின் நோக்கம் மக்கட்பேறு, புனித அகுஸ்தினார், "மக்கட்பேறு ஒன்றுதான் திருமணத்தில் நிகழும் பாலுறவை நியாயப்படுத்துகிறது" என்கிறார். மகாத்மா காந்தியடிகளும் இக்கருத்தையே கொண்டிருந்தார். விவிலியம் கூட, திருமண ஏற்பாட்டின்படி "பலுகிப் பெருகுங்கள்" என்பதையே நியாயப்படுத்துகிறது.

இக்கருத்தில் ஒரு குறை என்னவென்றால் மகப்பேற்றைத் தவிர்க்கும் திருமண உறவு தவறானது, நியாயமற்றது, ஏன் பாவமானதும்கூட என்னும் எண்ணத்திற்கு வழிவகுக்கும். அத்துடன் மனைவியைப் பிள்ளை பெறும் இயந்திரமாக இக்கருத்து புரிந்து கொள்ளப்படும்.

இந்த நால்வரின் மனநிலை, ஆண் ஆதிக்கம் கொண்ட சமுதாயம் மனைவியை ஓர் உடைமைப் பொருளாக, ஒரு வேலைக்காரியாக, பிள்ளை பெறும் ஓர் இயந்திரமாகவே பார்க்கிறது.

புதிய திருச்சபைச் சட்டம் "திருமண உடன்படிக்கை தன் இயற்கைப் பண்பிலே மணமக்களின் நலனுக்காகவும் (The Good of the Spouses) மகப்பேறு மற்றும் குழந்தை வளர்ப்பிற்காகவும்" (The Procreation and Education of Children) என்று வரையறுக்கின்றது.

இதே கருத்தை இரண்டாம் வத்திக்கான் சங்கம், "திருமணம் பிள்ளைப்பேற்றுக்காக மட்டும் ஏற்படுத்தப்பட்டதல்ல" என்றும் "மகப்பேறு இல்லாத திருமணமும் உண்மையான திருமணமே" என்றும் திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

## இது இல்லையேல்

- உறவு இல்லையேல் விரிசல்கள் மட்டுமே மிச்சமாகும்.
- வளர்ச்சி இல்லையேல் வீழ்ச்சி மட்டுமே வீதி எங்கும் வலம் வரும்.
- நம்பிக்கை இல்லையேல் சந்தேகமும் அவநம்பிக்கையும் எல்லா உறவுகளையும் ஊனமாக்கும்.
- ஒற்றுமை இல்லையேல் பிளவும் பகையும் முன்னேற்றங்களைத் தடுத்து, பகைவர்களை உருவாக்கும்.
- தியாகம் இல்லையேல் பழி வாங்குதலும் குற்றம் சாட்டுதலும் பொதுவாகும்.
- மனித வாழ்க்கை ஒரேயொரு நொடிதான். ஒவ்வொரு நொடியிலும் முழுமையாக வாழவேண்டும்.

## மணமக்களின் ஒற்றுமை

திருமணத்தின் நோக்கங்களுள் ஒன்று மணமக்களின் ஒன்றிப்பு (Unitive Aspect). மணமக்களிடையே இந்த ஒன்றிப்பை உருவாக்குவது அன்பு என்ற மகத்தான, படைப்பாற்றல் மிக்க சக்தியாகும். தமிழில் அன்பைக் குறிக்க "பசை" என்றும் "நார்" என்றும் இரு சொற்கள் உள்ளன. பசை பொருட்களை ஒட்டுவதுபோல அன்பு ஆள்களை இறுகப்பிணைக்கிறது.

நாம் யாரை அன்பு செய்கிறோமோ அவருக்கேற்ப அன்பு வடிவம் பெறுகிறது. இரு நண்பர்களிடையே உள்ள அன்பு நட்பு என்றும், பெற்றோர் - பிள்ளைகள் மேல் காட்டும் அன்பு பாசம் என்றும், கணவன் - மனைவியிடையேயுள்ள அன்பு காதல் என்றும், இறைவன் நம்மீது காட்டும் அன்பு அருள் என்றும், பக்தன் பரமனிடம் காட்டும் அன்பு பக்தி என்றும், தாய் மொழி மீது, தாய்நாட்டின் மீது காட்டும் அன்பு பற்று என்றும் பெயர் பெறுகின்றது. எனவே, அனைத்து உறவுகளுக்கும் உயிர்களுக்கும் அடிப்படை அன்பு என்பது புலனாகிறது.

ஒரு முறை மறைக்கல்வி வகுப்பில் 1கொரி 13ஆம் அதிகாரத்தில் அன்பைப் பற்றிக் கூறிக்கொண்டிருந்த போது, வகுப்பில் "பாசத்திற்கும் காதலுக்கும் உள்ள வேறுபாடு என்ன" என்று நான் கேட்க, குறும்புக்கார மாணவன் ஒருவன், "பிரதர், ஒங்க பொண்ணு மேலே நீங்க வச்சிருக்கிற அன்பு பாசம், உங்க பொண்ணு மேலே நான் வச்சிருக்கிற அன்பு காதல்" என்று பதில் கூறினான். எனக்குப் பெண் பிள்ளை இல்லை என்று தெரியாமல்.

பெற்றோர்களின் பாச அரவணைப்பலிருந்த காதலன் பிடியில் பிள்ளைகள் செல்வது இயற்கையின் நியதி. இறைவனின் திட்டம். இதைப் பெற்றோர்கள் புரிந்துகொண்டால், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் என்றுமே தங்கள் ஆதிக்கத்தின் கீழ்தான் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க மாட்டார்கள். தங்கள் பிள்ளைகளின் காதல் வாழ்வைக் கண்டு காழ்ப்புணர்வு அடையமாட்டார்கள்.

மணமக்கள் பாசத்திலிருந்து காதலுக்குக் கடந்து செல்ல வேண்டிய அவசியத்தைப் பற்றி விவிலியம் பின்வருமாறு கூறுகின்றது. "மனிதன் தன் தந்தையையும், தாயையும் விட்டுத் தன் மனைவியோடு ஒன்றித்திருப்பான்" (தொ.நூ 2:24) பெற்றோர்கள் புரிந்து கொள்ள வேண்டிய அடிப்படையான உண்மையைக் கலித்தொகை அழகுபடக் கூறுகிறது. "சந்தனம் மலையில் பிறந்தாலும் அது மலைக்குச் சொந்தமல்ல, முத்து கடலில் பிறந்தாலும் அது கடலுக்குச் சொந்தமல்ல. இசை யாழிலே பிறந்திருந்தாலும் அது யாழுக்கு சொந்தமல்ல. அது போல் உன் மகள் உன் வயிற்றில் பிறந்தாலும் அவள் உனக்கு உரியவள் அல்ல. மாறாக, கணவனுக்கே உரியவள்!"

இக் கருத்தைக் கூறவந்த திருப்பாடல் ஆசிரியர், "காதல் சாவைப் போல வலிமையுள்ளது. காதல் வைராக்கியம் பாதாளம்போல் கொடியது. அதன் சுடர்கள் தீக் கொழுந்தையொக்கும் பெருங்கடலும் அன்பைத் தணிக்கப் முடியாது. வெள்ளப் பெருக்கும் அதை மூழ்கடிக்க இயலாது" என்கிறார். திருமண அன்பு அல்லது காதல், இறைவன் மனிதனுக்கு வழங்கியுள்ள மாபெரும் கொடை. இக்கொடையை இறைவன் மணமக்களின் நலனுக்காகவே நல்கியுள்ளார். இறைவன் தான் படைத்த அனைத்தையும் உற்றுநோக்கிய போது அவரின் படைப்புக்கள் நன்றாக இருந்தன. மிகவும் நன்றாக இருந்தன. (தொ.நூ 1:31) ஆனால், ஒன்றே ஒன்று மட்டும் அவரின் பார்வைக்கு நன்றாகத் தோன்றவில்லை. அதுதான், ஆதாமின் தனிமை. "மனிதன் தனிமையாய் இருப்பது நன்றன்று, அவனுக்குச் சரிநிகரான ஒரு துணையை அவனுக்கென உண்டாக்குவோம்" (தொ.நூ 2:18). மனிதன் தனிமையில் இனிமை காண இயலாது என்றறிந்த இறைவன், ஆணுக்குத் துணையாகப் பெண்ணைப் படைத்தார். ஆணும் பெண்ணும் கணவன், மனைவியாக இணைந்து உருவாக்கும் அன்புச் சமூகமே இல்லறம் என்னும் நல்லறமாகும்.

இப்படி இணைந்த மணமக்களிடையே ஆழமான அன்பின் ஒருங்கிணைப்பு தேவை. உலக வரலாற்றில் முதல் மணமகன் முதல் மணமகளைப் பார்த்துக் கூறும் வார்த்தைகளில் இது தெளிவாகிறது. "இவள் என் எலும்பின் எலும்பு, உடலில் உடல்" (தொ.நூ 2:23) இந்த உறவு ஒன்றிப்பை நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து, "அவர்கள் இருவர் அல்லர், ஒரே உடல்" (மத் 19:6) என்று விளக்குகிறார். அதாவது, இன்பத்திலும் துன்பத்திலும், உடல் நலத்திலும் நோயிலும், வெற்றியிலும் தோல்வியிலும், ஏற்றத்திலும் ஏமாற்றத்திலும், எழுச்சியிலும் வீழ்ச்சியிலும், இன்மையிலும், கசப்பிலும், சுவையிலும் சுமையிலும், வெட்டிப் பிரித்தாலும் விட்டுப்பிரிய முடியாத ஓர் இணக்கமான, இதயப்பூர்வமான, உணர்ச்சிப்பூர்வமான, உறவு ஒன்றிப்பை அடைகின்றனர் மணமக்கள். திருமணத்தின் போது மணமக்கள் மாலையை மாற்றிக்கொள்வது, அவர்களின் இதயங்களை மாற்றிக்கொள்வதன் வெளி அடையாளமே.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் கலிபோர்னியா மாநிலத்தில் இரு தலைகள் உள்ள ஓணான் அங்குள்ள அருங்காட்சியகத்தில் உள்ளது. அதன் ஒரு தலைப் பக்கம் உள்ள ஓணான் ஒரு பக்கம் இழுத்தால் மறுபக்கத் தலையுள்ள ஓணான் மறுபக்கம் இழுக்கும். இது பார்ப்பவர்களுக்கு வேண்டுமானால் வேடிக்கையாக இருக்கலாம். ஆனால், அந்த ஓணானுக்குக் கஷ்டம். மன ஒற்றுமை மண வாழ்விற்கு இன்றியமையாத பண்பு. இரு மனங்கள் இணைந்து ஒரு மனமாவதே திருமணம். அது இல்லாவிட்டால், இந்த ஓணானைப் போன்று அவதிப்பட வேண்டியதுதான். "இரண்டு கண்கள் ஒரே பார்வை, இரண்டு கால்கள் ஒரே பயணம்" என்று மனமொத்த தம்பதியர் இன்மையான இல்லறத்தை அமைக்கின்றார்கள்.

தொடரும்

**சிந்தனை**

- கடவுள் சேர்த்து வைத்தவர்களை யாராலும் பிரிக்க முடியாது.
- மன ஒற்றுமையும், ஒரே நோக்கமும் இல்லாவிட்டால் திருமணப் பந்தம் முறிந்துவிடும்.
- ஒரு மனிதன் தன் திருமணத்திற்கு அடுத்த நாள் தனக்கு ஏழு வயது கூடுதலாக ஆகியிருப்பதை உணர்கிறான்.




இயேசுவால் நிறுவப்பட்ட திருச்சபையின் இன்றியமையாத இயல்புப் பண்பு ஒற்றுமையாகும். ஆனால் இன்று திருச்சபை, மேலைத்தேய, கீழத்தேய கத்தோலிக்க திருச்சபை எனவும், அங்கிலிக்கன், மெதடிஸ், பப்டிஸ், பிரஸ்பிடீரியத் திருச்சபை, தென்னிந்தியத் திருச்சபை என பல கிறிஸ்தவ திருச்சபைகளாகவும் பிளவுபட்டுக் காணப்படுகின்றது. இப்பிளவுபட்ட நிலைக்கு அடிப்படைக்காரணம் அவை மறைக்கோட்பாடுகள், வழிபாட்டு முறைகள், ஆட்சி, நிர்வாக அமைப்புக்கள், மறைபணிச் செயல்பாடுகள் என்பனவற்றில் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டு நிற்பதாகும். அவை பலவேளைகளில் ஒன்றிற்கு ஒன்று முரணாகவும், எதிராகவும் கூடச் செயற்படுகின்றன.

திருச்சபையில் காணப்படும் இப்பிளவுபட்ட நிலை அனைத்துக்கும் மேலாக அதை நிறுவிய இயேசுவின் நோக்கத்துக்கும் (யோவா. 10:16, 17: 1), அதனால் அதன் இயல்புக்கும் முரணானதாகும். திருச்சபையின் இயல்புப் பணியான நற்செய்திப் பணிக்கு பெரும் தடையாகும். கிறிஸ்தவ விசுவாசிகளின் மத்தியில் ஒருவகை போட்டி மனப்பான்மையை வளர்ப்பதுடன், குழப்பத்தையும் இப்பிளவு நிலையேற்படுத்தியுள்ளது. நற்செய்தியை அவர்கள் ஆர்வமுடன் கேட்டுக் கடைப்பிடிப்பதற்கு தடையாக உள்ளது.

## கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான அடிப்படைகள்

கிறிஸ்தவ விசுவாசத்திற்கு பொதுவான அடித்தளம் அமைப்பது இறைவெளிப்பாடாகும் (எபி. 1: 1). அனைவரதும் பொதுக்கதி தந்தையாகிய இறைவன். அனைவரும் தேடிஅடைவது இயேசுக் கிறிஸ்து வழியாக அருளப்படும் மீட்பு வாழ்வு (கலா. 2:20, 1பேது. 2:21). அனைத்துக் கிறிஸ்தவருக்கும் முதற் கொடையும், உள்ளூரப் புதுப்பித்தல் அளிப்பவரும் தூயஆவியானவர். தூய ஆவியால் நாமும் இறைவனை "அப்பா, தந்தையே என அழைக்கின்றோம்" (உரோ. 8: 23). மேலும், கிறிஸ்தவர்கள் அனைவரும் இயேசுவின் பாஸ்கா மறைநிகழ்வில் பங்குகொண்டு, எதிர்நோக்கால் உறுதிபெற்று, புதுவாழ்வை நோக்கிப் பயணிக்கிறார்கள் (பிலி. 3:10, எபி. 11:2). தொடக்கத் திருச்சபையில் ஏற்பட்ட பிளவின் போது கிறிஸ்தவ விசுவாசிகளை ஒன்றிப்பில் வாழ அறிவுறுத்திய புனித பாவுலு அவர்களுக்கு அவர்கள் இயேசுவின் நாமத்தில் பெற்ற திருமுழுக்கையும் (1கொரி. 1: 10), இயேசுவின் நாமத்தில் அவர்கள் பகிர்ந்து கொள்ளும் இயேசுவின் விருந்தின் முக்கியத்துவத்தையும் (1கொரி. 11: 26) நினைவுபடுத்துகிறார்.

## கிறிஸ்தவ ஒன்றிப்பு முயற்சிகள்

தொடக்கத் திருச்சபையில் பிளவுகள் ஏற்பட்டதுபோல, பிற்பட்ட காலங்களில், எடுத்துக்காட்டாக, கி.பி. 3ம் 4ம் நூற்றாண்டுகளில் தோன்றிய பேதகங்களின் விளைவாகவும், கி.பி.11ம் நூற்றாண்டில் மறைக் கோட்பாடுகள் பற்றி வளர்ந்த கருத்துக்களாலும், கி.பி. 16ம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமய சீர்திருத்தக்கால மாற்றங்களினாலும், கி.பி. 18ம் நூற்றாண்டில் வளர்ந்த மறுமலர்ச்சிகால சிந்தனைகளாலும் திருச்சபையில் காணப்படும் பிளவுகள் தோன்றி வளர்ந்தன. இவற்றுக்கு மத்தியில் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆங்கிலிக்கன் திருச்சபைப் பணியாளர் பவுல்வாட்சன் 1908ல் "கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தை" ஆரம்பித்தார். 1910ல் "ஆங்கிலிக்கன் சீர்திருத்த சபைகளின் இணைப்பு" எடின்பேர்க் நகரத்தில் இடம்பெற்றது. 1916ல் திருத்தந்தை 15ம் பெனடிக் "கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தை" உலகெங்குக்கும் விரிவாக்கினார். "தென்னிந்திய ஆங்கிலிக்கன் சீர்திருத்த சபைகளின் இணைவு" 1947ல் ஏற்பட்டது. "திருச்சபைகளின் உலகப் பேரவை" 1948ல் உருவாக்கப்பட்டது. 1949ல் ஒற்றுமை இயக்கம் பற்றிய அறிவுரை கத்தோலிக் திருச்சபையால் வெளியிடப்பட்டது. கிறிஸ்தவ ஒன்றிப்பில் தனிப் பெரும் அக்கறைகாட்டிய திருத்தந்தை 23ம் அருளப்பர் தலைமையில் ஒன்றுகூடிய 2ம் வத்திக்கான் சங்கம், 1963 - 1965, "கிறிஸ்தவ ஒன்றிப்பு" பற்றிய விதித்தொகுப்பை வெளியிட்டது. திருத்தந்தை 6ம் பாவுலு கிறிஸ்தவ பிரிவினைக்காக அனைத்து திருச்சபைகளிடமும் மன்னிப்புக் கோரினார். கீழைத்தேய மறைத்தந்தை அத்தனாகோரைச் சந்தித்து உரையாடினார். திருத்தந்தையர்கள் 2ம் யோவான் பாவுலு, 16ம் பெனடிக்ட், பிரான்சிஸ் அவர்களின் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான முயற்சிகள் 2ம் வத்திக்கான் சங்கத்தின் படிப்பினைகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. திருச்சபைகளின் கூட்டுமுயற்சியால் திருவிவிலியம் பொதுமொழிபெயர்ப்பு செய்யப்பட்டது.

## கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான் 2ம் வத்திக்கானின் விதிகள்

"கிறிஸ்தவ விதித் தொகுப்பு" ஒற்றுமைக்கு வழியைத் திறந்து வைக்கின்றது. கிறிஸ்தவர்கள் ஒருவர் ஒருவர் பற்றிக் கொண்டுள்ள மனநிலையில், கருத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முயல்கிறது. இவ்விதித்தொகுப்பில் மூன்று சிறப்பான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. 1. ஏனைய கிறிஸ்தவ சபைக் கிறிஸ்தவர்கள்பால் அன்பும் மதிப்பும் காட்டப்படுகிறது. இதுவரை திரிபுவாத சமூகங்களாகவும், பிரிவினைவாதச் சபைகளாகவும் கருதப்பட்ட ஏனைய சபைகள், திருச்சபை என ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. "ஆண்டவரில் இவர்கள் சகோதரர்கள்" என அன்புடன் அழைக்கப்படுகின்றனர் (எண் 3). 2. "கிறிஸ்துவே அனைவருக்கும் ஒன்றிப்பின் மையம்" (எண் 2), "இயேசுவின் ஆவி அனைத்து சபைகளிலும் செயல்படுகிறார்" (எண் 4) என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 3. கிறிஸ்தவ பிளவுக்கு இருசாராருமே பொறுப்பு என்பது வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது (எண்.3). எனவே ஒரு தொடர் சீர்திருத்தத்திற்கு எல்லா திருச்சபைகளும் அழைக்கப்படுவது உணர்த்தப்படுகிறது (எண்.6).

முடிவாக, தூய ஆவியின் வழிநடத்தலில் நாம் அனைவரும் ஒரே கதியை நோக்கிப் பயணிக்கும் விசுவாசிகளின் சமூகமாகும். பன்மையில் ஒருமை காண்பதும், இணக்கத்திலும் இசைவிலும் வாழ்ந்து நற்செய்தியின் சாட்சியங்களாவதும் கிறிஸ்தவ அழைப்பாகும். கிறிஸ்தவர்கள் இறையாட்சி வாழ்வை (உரோ. 14:17) நாடி வாழ்வது அனைத்துக்கும் மேலானது என்பது இயேசுவின் படிப்பினையாகும் (மத். 6:31). இவ்வாழ்வு மனமாற்றத்தினால் மட்டுமே கைகூடுகிறது (மாற். 1,14-15). இன்றும், திருச்சபைகளின் பொதுத்தன்மைப் பேணுவது அவைகள் "தந்தை, மகன், தூய ஆவியின் நாமத்தில்" அளிக்கும் திருமுழுக்காகும். மேலும், அடிமட்டத்தில் வளர்ந்துவரும் கிறிஸ்தவ கலப்புத் திருமணங்கள் திருச்சபையின் ஒற்றுமையை நீறுபூத்த நெருப்புப் போல வாழ்வதற்கு துணையாகின்றன. திருச்சபைகளுக்கிடையே வருடம் ஒருமுறை நடைபெறும் கிறிஸ்தவ கூட்டு ஒன்றிப்பு வழிபாடுகள் திருச்சபையின் ஒற்றுமையின் தேவையை நினைவுபடுத்தும் மின்னல் கீறுகளாகும்.

தூய ஆவியின் துணையில் கிறிஸ்தவ ஒன்றிப்பை மக்கள் இயக்கமாக்குவது காலத்தின் தேவையாகும்.

**ஆக்கம் :**

**அருட்தந்தை**

**ஜெராட் டீ ரொசய்ரோ, அ.ம.தி.**

---

# இயேசுவுக்கே புகழ்



பெயர் ஞானப்பிரகாசம் ஞானதீபன். நான் எனது வாழ்க்கையில் நடந்த மறக்க முடியாத ஒரு விடயத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். காரணம் எனக்கு கிடைத்த பாக்கியம் உங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்றும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நீதியான உன்மையுள்ள உயிர்வாழும் அதிசயங்களை செய்யக் கூடிவர் இச்சம்பவமும் ஒரு சான்றாகும் என நம்புகின்றேன்.

எமது திருத்தந்தை அவர்களின் 2015ஆம் ஆண்டு இலங்கை விஜயத்தின் போது எல்லோரையும் போலவே நானும் அவரைப் பார்க்க வேண்டும். அவர் கையால் ஆசீர்வாதம் வாங்க வேண்டும் என நானும் எனது மனைவியும் நினைத்தோம். பிறகு 13.01.2015 அன்று கலை 5.30 மணிக்கு ஆமர் வீதியினூடாக பயணம் செய்யும் பாப்பரசரை பார்க்க கைகளில் கொடிகளை ஏந்திய வண்ணம் சென்றோம் திருத்தந்தை நாங்கள் ஆமர் வீதியில் கண்டோம், ஆனால் திருத்தந்தை கண் இமைக்கும் நேரத்தில் நாங்கள் இருந்த இடத்தை தாண்டி சென்று விட்டார். பிறகு ஏக்கத்தோடு சிறிய சந்தோஷத்தோடும் வீடு சென்றோம்.

அடுத்த நாள் காலி முகத்திடலில் பாப்பரசரின் தலைமையில் நடைபெற்ற திருப்பலிக்கு சென்றேன். அங்கே போய் அவரை நான் Screenஇல் தான் பார்த்தேன். பிறகு புனித அந்தோனியார் திருத்தலத்தில் திருப்பலிக்கு உதவி செய்யும் சகோதரன் ஸ்ரீஹரன் எனக்கு ஒரு செபமாலையை தந்தார். அண்ணா இச்செபமாலை பாப்பரசர் ஆசீர்வதித்து தந்தார் என்று சொன்னார். நான் அதை மனைவியிடம் கொடுத்து விட்டேன். 12.01.2015 அன்று புனித அந்தோனியார் திருத்தலத்தில் வைத்து அருட்சகோதரர் ஒருவர் சுமார் 1 வருடத்துக்கு பின்பு என்னை கண்டு எனக்கு இரண்டு செபமாலைகளை தந்தார். இது பாப்பரசர் ஆசீர்வதித்து தந்தது என்று சொன்னார். அதையும் பெற்ற என் மனைவியிடம் கொடுத்தேன். பின்பு காலி முகத்திடலில் இருந்து நான் வீட்டுக்குச் சென்றேன். சென்று எனது நண்பனின் திருமண திருப்பலிக்காக பொரளை புனித லூக்கா ஆலயத்துக்கு சென்றேன். செல்லும் முன் நமது பரிசுத்த திருவிவிலியத்தில் உள்ள உயிர் உள்ள வார்த்தைகளை என் கண்களுக்கு தென்பட்டன. அவற்றை விசுவசித்தேன். அவைகளாவன

"என் சமூகம் உமக்கு முன்பாகச் செல்லும், (வி.ப 33:14)
பயப்படாதே நான் உனக்கு துணை நிற்கிறேன், (எசாயா 41:14)
உன்னை அதிசயங்களை காணப்பண்ணுவேன் (மீக்கா 7:15)
நான் உன்னை விட்டு விலகுவதும் இல்லை, உன்னைக் கைவிடுவதும் இல்லை, (யோசுவா 1:5)

இயேசுவின் இரத்தம் ஜெயம் போன்ற உயிர் உள்ள வார்த்தைகள் எனக்கு தென்பட்டன. அவற்றை நான் விசுவசித்தேன். பிறகு நான் வந்த பதை அருகில் இருந்த புனித அந்திரேயரிடம் வேண்டிக்கொண்டு வந்தேன். புனித அந்திரேயா புனித பேதுரு வழி வந்தவர் தானே பாப்பரசர் அவரை நான் நன்றாக காண வேண்டும் என்று நினைத்தேன். பிறகு நான் கொழும்பு பேராயர் இல்லத்துக்கு முன்னாள் உள்ள அங்லிக்கன் திருச்சபை ஆலயத்தில் நடந்த திருமண திருப்பலியில் கலந்து கொண்டு நான் பேராயர் இல்லத்திற்கு முன் வருகையில் பொலிஸ் அதிகாரிகள் கடமையில் இருப்பதை கண்டேன். பிறகு அவர்களிடம் பேசியபோது அவர்கள் திருத்தந்தை இப்போது வரப்போகிறார் என்று சொன்னார்கள். அப்போது நான் கேட்டேன். அவரை நான் இங்கிருந்தவாறே பார்க்கவா என்று கேட்டேன். அதற்கு அவர்கள் என்னை பேசினார்கள். "தூர செல், அங்கே நின்று பார், இங்கே இருக்க வேண்டாம்" என்றார்கள். அப்போது எனக்கு அருட்தந்தை டெரல் கூஞ்சே அடிகளார் ஞாபகத்துக்கு வந்தார். அவர் ஒரு நாள் செபமாலையினால் அவருக்கு நடந்த அதிசயத்தை எங்களுடன் பகிர்ந்து கொண்டார். அது எனக்கு ஞாபகம் வந்தது. அதேபோல் நானும் செபமாலை சொல்லத் தொடங்கினேன். இரண்டு முறை செபமாலை சொல்லி மூன்றாவது முறை சொல்லிக் கொண்டு இருக்கையில் திருத்தந்தை நான் இருந்த இடத்துக்கு அருகில் காரில் வந்தார். அவருடைய பாதுகாவலர்கள் சற்று பின்னால் வந்தார்கள். திருத்தந்தை என்னையும் என்னுடைய செபமாலையையும் அவரது கைபட ஆசீர்வதித்தார். அந்த இடத்தில் இருந்த எல்லோரையும் விட்டு விட்டு என்னை ஆசீர்வதித்தார். பிறகு சந்தோஷத்தில் துள்ளினேன். யாவற்றையும் மறந்தேன், பிறகு அவர் பேராயர் இல்லம் சென்று 5 நிமிடங்களின் பிறகு மீண்டும் வந்தார். பிறகு பாதையோரம் இருந்த நான் எனது செபமாலையை காட்டி Bless me Lord என்றேன்" மறுபடி தனது காரை Slow பண்ணி என்னையும், செபமாலையையும் இரண்டாவது முறையும் ஆசீர்வதித்தார். நான் எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தேன். அன்று எனது வீட்டுக்கு நடந்தே சென்றேன்.

பேராயர் இல்லத்திலிருந்து கொழும்பு கொச்சிக்கடை, புனித அந்தோனியார் ஆலயம், மருதானை புனித பாத்திமா அன்னை ஆகியவற்றிற்கு நடந்தே சென்று இறைவனுக்கும் பரிசுத்த தேவமாதாவுக்கும், புனித அந்தோனியாருக்கும் புனித அந்திரேயாவுக்கும் நன்றி கூறினேன். ஆண்டவர் என் மன்றாட்டை கேட்டார். என்னிடம் காசோ பணமோ இல்லை. எனினும் நான் ஆண்டவரிடம், "ஆண்டவரே நானும் பிறரைப்போல் காசும் இவ்வுலக வாழ்க்கையைத் தேட வேண்டுமா? எனது செபங்களும் நடத்தைகளும் உனக்கு பிடிக்கவில்லையா? உமது இரண்டாவது வருகையின்போது இப்படித்தான் நீதி வழங்குவீரா? என்று கேட்டேன். அதற்கு அவர் நீதியுள்ள, உண்மையுள்ள சர்வ வல்லவ தேவன் என்று எனக்கு புலப்படுத்தினார்

(தொடர்ச்சி 15ம் பக்கம் )

**தகவல் : ஞா. ஞானதீபன்**




# திருத்தந்தையின் பிலிப்பைன்ஸ் திருப்பயணத்தின் நிகழ்வுகளிலிருந்து





## “ஆசியாவின் விசுவாசத்தின் மறைப்பணியாளர்களாக இருங்கள்”

பிலிப்பின்சில் குழந்தை இயேசு ஞாயிறு சிறப்பிக்கப்பட்டது. இந்த இயேசு திருவுருவம் அரசர் போன்றுதலையில் கிரீடம், கையில் செங்கோல் பட்டு உடுப்பு அணிந்துள்ளது. மக்கள் பலர் இத்திருவுருவங்களை இந்நாளில் வைத்திருந்ததைக் காண முடிந்தது. மனிலாவின் ரிசால் பூங்காவில் திருப்பலி நிகழ்த்தச் சென்றார் திருத்தந்தை பிரான்சிஸ். தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்ததால், அவ்விடத்திலிருந்து அறுபது இலட்சம் விசுவாசிகள் மழைப்பாகையை உடுத்தியிருந்தனர். ஆனால் இவர்கள் திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்பதற்கு மழை தடையாக இல்லை.

இத்திருப்பலியில் திருத்தந்தை ஆங்கிலத்தில் உரையாற்றினார். ஆசியாவின் விசுவாசத்தின் மறைப்பணியாளர்களாக இருங்கள் என பிலிப்பின்ஸ் மக்களைக் கேட்டுக்கொண்டார் திருத்தந்தை.

இத்திருப்பலியின் இறுதியில் பிலிப்பைன்ஸ் ஆயர் பேரவைத் தலைவர் பேராயர் சாக்ரடீஸ் வில்லெகாஸ் ஆண்டகை திருத்தந்தையை கதிரவனின் ஒளி என்று வாழ்த்தி பேசினார். இப்போது மனிலா வளைகுடாவில் சூரியன் மறையவுள்ளது. உலகின் மிக அழகான சூரிய அஸ்தமனம் இது என்று சொல்வார்கள். சூரியன் மறைந்த பின்னர், இருள் வரும். இதற்குப் பலர் பயப்படுவார்கள். ஆனால் நாங்கள் இதற்குப் பயப்படுவதில்லை. திருத்தந்தையே, தாங்கள் ஒளியைக் கொண்டுவந்துள்ளீர்கள். தாங்கள் கதிரவனின் ஒளி, பிலிப்பீன்ஸ் சிறாரும் எங்களுக்கு கதரவனின் ஒளியே, சிறார் எங்களின் நம்பிக்கை, எங்களின் மகிழ்வு, எங்களின் சொத்து. திருத்தந்தையே நாங்கள் உங்களை அன்பு செய்கின்றோம். தங்களின் இந்தப் பயணத்துக்கு நன்றி என்று கூறினார்.இவ்வுரைக்குப் பின்னர் மனிலா கர்தினால் தாக்லே ஆண்டகை அவர்களும் திருத்தந்தைக்கு நன்றி தெரிவித்தார். தெருச்சிறார், அநாதைகள், கைம்பெண்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், நோயாளிகள் என ஒவ்வொருவர் பேராலும் நன்றி தெரிவிக்கின்றேன். தங்களுக்காகச் செபிக்கும்படி அடிக்கடி கூறுகிறீர்கள். நாங்கள் தங்களுக்காகச் செபிக்கிறோம் என உறுதி கூறுகிறோம். ஒவ்வொரு பிலிப்பினோவும் உங்களோடு உரோமைக்கு அல்ல, மாறாக, சேரிகளுக்கும், சிறைகளுக்கும், மருத்துவமனைகளுக்கும், அரசியல் உலகுக்கும், கலை, அறிவியல், கல்வி, கலாச்சாரம் என எல்லா இடங்களுக்கும் மறைப்பணியாற்றச் செல்ல விரும்புகின்றனர். கிறிஸ்துவின் ஒளி ஒளிரட்டும், நன்றி எனக் கூறினார் கர்தினால் தாக்லே திருத்தந்தையின் பிலிப்பீன்ஸ் திருத்தூதுப் பயணத்தில் இத்திருப்பலிதான் இறுதி நிகழ்வு. எனவே திருத்தந்தை மழைப்பாகையுடன் திறந்த காரில் அக்கூட்டத்தில் வலம் வந்தபோது மக்கள் எழுப்பிய ஆரவாரம்கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

## பிலிப்பைன்ஸ் திருப்பயணத்தின் முடிவில் தாய் மரியாவுக்கு நன்றி

இலங்கை மற்றும் பிலிப்பீன்ஸ் நாடுகளுக்குத் தனது திருத்தூதுப் பயணத்தை நிறைவுசெய்து வத்திக்கானுக்குத் திரும்பும் வழியில் உரோம் மக்களின் அன்னை மரியாவுக்கு நன்றி தெரிவித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

திருத்தந்தைக்கெனச் சிறப்பாக விடப்பட்ட A340 பிலிப்பைன்ஸ் வீமானத்தில் பத்திரிகையாளர்கள் மற்றும் சில திருச்சபை அதிகாரிகளுடன் ஏறக்குறைய 15 மணி நேரங்கள் பயணம் செய்து உரோம் சம்ப்பினோ விமான நிலையம் வந்து சேர்ந்த திருத்தந்தை, விமான நிலையத்திலிருந்து வத்திக்கானுக்கு காரில் வந்தபோது உரோம் புனித மரியா பசிலிக்கா சென்று பெரிய மலர்க்கொத்து ஒன்றை அர்ப்பணித்தார்.

இப்பெரிய மலர்க்கொத்து, மனிலா திருப்பீடத் தூதரகத்தில், ஓர் அருள்சகோதரி திருத்தந்தைக்கு வழங்கியதாகும்.

வெளிநாட்டுத் திருத்தூதுப் பயணங்கள் நிறைவு செய்த பின்னரும், அதற்கு முன்னரும் உரோம் மேரி மேஜர் அன்னை மரியா பசிலிக்காவுக்கு சென்று செபிப்பதை வழக்கமாக கொண்டிருக்கின்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## மனிலா தாமஸ் பல்கலைக்கழகத்தில் இளையோர்களை சந்தித்தார்

தை மாதம் 18ஆம் திகதி ஞாயிறன்று தலைநகர் மனிலாவில் எங்கு திரும்பினாலும் மக்கள் வெள்ளம். கனமழைக்கும், புயலுக்கும் பெயர்போன பிலிப்பீன்ஸ் நாட்டில் தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்தாலும் கூட அதனைப் பொருட்படுத்தாமல் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைப் பார்த்து அவரின் அறிவுரைகளைக் கேட்டு ஆசீர் பெறுவதற்காக இப்படி மக்கள் திரண்டிருந்தனர். உள்ளூர் நேரம் காலை 9.00 மணிக்கு மனிலா திருப்பீடத் தூதரகத்தில், இத்திருத்தூதுப் பயண ஒத்துழைப்பாளர்கள் மனிலா நன்கொடையாளர்களைச் சந்தித்தார் திருத்தந்தை. பின்னர் அங்கிருந்து ஆறு கிலோ மீட்டர் தூரத்திலுள்ள மனிலா புனித தாமஸ் அக்குவினாஸ் பாப்பிறை பல்கலைக்கழகம் சென்றார். அண்மையில் 400ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடிய இப்பல்லைக்கழகம், ஆசியாவிலே மிகப் பெரியதும் மிகப் பழமையானதும் ஆகும். தொமினிக்கன் சபையினர் நடத்தும் இப்பல்கலைக்கழகம் வளாகத்தில் கூடியிருந்த ஏறக்குறைய முப்பதாயிரம் இளையோர் மத்தியில் திறந்த காரில் வலம் வந்து மேடையில் அமர்ந்தார்.

இந்த இளையோர் சந்திப்பு நிகழ்வில், முதலில் பிலிப்பைன்ஸ் ஆயர் பேரவையின் இளையோர் ஆணைக்குழு தலைவர் லியோபால்டு அவர்கள் திருத்தந்தையை வரவேற்றுப் பேசினார். பின்னர் 14 வயது முன்னாள் தெருச்சிறுமி Jun Chura என்பவர் தன்னைப் பற்றி அறிமுகம் செய்து, தெருவில் குப்பை மேடுகளில் சாமான்களைப் பொறுக்கி வாழ்ந்தபோது தகரங்களால் கிழிக்கப்பட்டது. நடைப்பாதையில் சென்றவர்களால் பாலியல் முறையில் நச்சரிக்கப்பட்டது உட்பட தனது வேதனையான அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். பின்னர் அச்சிறுமியோடு நின்று கொண்டிருந்த 12 வயது Glyzelle Palomar என்பவர், அப்பாவிச் சிறார்கள் இவ்வளவு துன்பப்பட கடவுள் ஏன் அனுமதிக்க வேண்டும்? என்று திருத்தந்தையிடம் கேட்டார். இவ்விருவரும் தொடர்ந்து பேச முடியாமல் அழுதனர். அப்படி அவர்கள் பேசியபோது திருத்தந்தையும் அவர்களின் உணர்வினில் பங்கு கொண்டதை உணர முடிந்தது. திருத்தந்தை இவ்விடத்தில் இளையோருக்கு உரை நிகழ்த்தியபோது ஏற்கனவே ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட உரையை வைத்துவிட்டு இஸ்பானியத்தில் பேசுவதற்குத் திருத்தந்தை முடிவெடுத்தார்.

அடுத்து சட்டம் பயிலும் லெயாந்த்ரோ சாந்தோஸ் என்ற இளைஞர், இக்காலத்தில் தகவல் தொழில் நுட்பங்களால் சூழப்பட்டுள்ள இளையோர் அன்பின் அர்த்தத்தை அறியாமல் உள்ளனர் என்று திருத்தந்தையிடம் கூறினார். மூன்றாவதாக, ரிக்கி மாகோலோர் என்ற 29 வயது இளைஞர் பேசினார். இவர் மின்னியல் பொறியல் கல்வியை தற்போது முடித்திருப்பவர். தக்லோபானில் ஹையான் புயலில் உயிர்தப்பிப் பிழைத்திருக்கும் மக்களுக்கு சூரிய சக்தியைப் பயன்படுத்தி மின்விளக்கை கண்டுபிடித்து உதவியவர். சேவைகளைத் தங்களின் அன்றாடப் பணியோடு எப்படி தொடர்புபடுத்தி வாழ்வது என்று இந்த இளைஞர் திருத்தந்தையிடம் கேட்டார். இவர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிப்பதாக திருத்தந்தையின் உரை அமைந்திருந்தது.

இஸ்பானியத்தில் உரை வழங்கலாமா என்று இளையோரிடம் கேட்டு இவ்வுரையைத் தொடங்கினார். திருத்தந்தை. அச்சமயம் திருத்தந்தை பேசப் பேச, அருள்பணியாளர் மாற்கு அடிகளார் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துச் சொல்லிக் கொண்டிருந்தார். இவ்வுரையின் தொடக்கத்தில், இளையோரே, முதலில் ஒரு சோகமான செய்தியைச் சொல்கிறேன். இச்சனிக்கிழமையன்று தக்லோபான் விமான நிலையத்தில் திருப்பலி தொடங்கவிருந்த நேரத்தில் சாரம் சரிந்து விழுந்ததது. அது அப்பகுதியில் தன்னார்வத் தொண்டாற்றிய கிறிஸ்டல் என்ற இளம்பெண் மீது விழுந்து அவர் இறந்துவிட்டார். இவரின் வயது 27 உங்களைப் போன்ற வயதை ஒத்தவர் இவர். கத்தோலிக்க நிவாரணப் பணியில் தன்னார்வப் பணியாளராக வேலை செய்தவர். இப்பெண்ணைப் போன்ற இளையோர்களாகிய நீங்கள் அனைவரும் இப்போது என்னோடு சேர்ந்து மௌனமாக அப்பெண்ணுக்காகச் செபியுங்கள் என்றார். பின்னர் விண்ணகத்திலுள்ள நம் அன்னைமரியிடம் செபிப்போம் என்று சொல்லி “அருள் நிறைந்த மரியே” செபத்தையும் தொடங்கினார் திருத்தந்தை. பின்னர் அந்த இளம்பெண்ணின் பெற்றோருக்காவும் செபிப்போம். அப்பெண் அவ்வீட்டுக்கு ஒரே குழந்தை. அவரது தாய் ஹாங்காங்கிலிருந்து வந்து கொண்டிருக்கிறார். அவரது தந்தை மனிலாவில் இருக்கிறார். இப்போது நாம் வானகத் தந்தையை நோக்கிச் செபிப்போம் என்று அச்செபத்தையும் திருத்தந்தை தொடங்கினார். அனைவரும் சேர்ந்து செபித்தனர். இந்த இளையோர் சந்திப்பபை முடித்த திருத்தந்தை. மனிலா திருப்பீடத் தூதரகம் சென்றார். அங்கு தக்லோபானில் இறந்த இளம்பெண் கிறிஸ்டலினின் தந்தையையும் உறவினர் ஒருவரையும் சந்தித்து ஆறுதல் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## 01ம் பக்கம் — கிறிஸ்தவ ஒன்றிப்பு

பகிர்ந்து கொள்வதற்கு கிறிஸ்தவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். ஆகவே கிறிஸ்தவர்களாகிய நாம் நம்மிடையே காணப்படும் பிரிவுகளை களைவதற்கு முயற்சிக்க வேண்டும்.

அஞ்ஞாயிறன்று அங்கு கூடியிருந்த ஏறக்குறைய 40 ஆயிரம் மக்களுக்கு மூவேளை செப உரை வழங்கிய திருத்தந்தை இவ்வாண்டின் கிறிஸ்தவ ஒன்றிப்பின் மையப்பொருளான "எனக்கு குடிப்பதற்கு கொஞ்சம் தண்ணீர் கொடு" என்று இயேசு சமாரியப் பெண்ணிடம் இந்தச் சொற்களை மையமாக வைத்து தனது சிந்தனைகளைப் பகிர்ந்து கொண்டார். கடவுள் மனிதனாகப் பிறப்பதன் மூலம் நம் தாகத்தை சுவைத்தார். அதில் தண்ணீருக்காக நம் உடல் தாகத்தை மட்டுமல்ல எல்லாவற்றுக்கும் மேலாக தீமை மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறும் முழுமையான வாழ்வுக்குரிய தாகத்தையும் சுவைத்தார். இயேசு கடவுளின் வாக்குறுதிகளின் நிறைவாக இருக்கின்றார். ஏனெனில் இவர் தூய ஆவியாருக்கு உயிருள்ள தண்ணீரை அளிப்பார். அலைந்து திரியும் இதயங்களின் தாகத்தையும் வாழ்வு, அன்பு, சுதந்திரம், அமைதி ஆகியவற்றுக்கான இத் தண்ணீர் தீர்த்து வைக்கின்றது.

நாம் நம் இதயங்களில் இத்தாகத்தை எவ்வளவு பெற்றுள்ளோம் என்று சிந்திப்போம். ஆகவே கிறிஸ்தவர்களாகிய நாம் ஒன்றாய் இருக்கவேண்டுமென இயேசு விரும்புகின்றார். ஆனால் நாம் பிளவுபட்டுள்ளோம். நம் பாவங்களும், வரலாறும் நம்மைப் பிரித்துள்ளன. நாம் ஒன்றிணைந்து வருமாறு தூய ஆவியாரிடம் என்றும் செபிப்போம் என பரிசுத்த திருத்தந்தை புனித பவுல் பசிலிக்காவில் கூடியிருந்த மக்களுக்கு கூறினார்.

**நன்றி வத்திக்கான் வானொலி**

## 02ம் பக்கம் — தனியார் கல்வி

மரியாதையும் உடையவர்களாக காணப்படுவதை நாம் காணக்கூடியதாக இருப்பதுடன் பரீட்சைப் பெறுபேறுகளும் திறமையை வெளிக்காட்டுகின்றனர்.

எனவே பெற்றோர்களை திருப்திப்படுத்தவும் மாணவர்களின் உள சமநிலையை பேணவும், சமய செயற்பாடுகளை ஒழுங்காக செய்தவற்கும் எமது கத்தோலிக்க திருமறை ஆட்சிப் பீடம் இது சம்பந்தமாக பரிசீலனை செய்து கத்தோலிக்க மாணவர்களில் சற்று இறங்கி மாணவர்களின் சமய எதிர்கால இலக்கைக் கருத்திற்கொண்டு சகல மாவட்டங்களிலும் மறைக்கல்வி திருப்பலி, மறைக்கல்வி வகுப்புகளை காலை 8.30 மணிக்குள் முடித்து மாணவர்களுக்கு கற்க சந்தர்ப்பம் அளிப்பார்களானால் எல்லோரும் நன்மையும், பயனும் பெறக்கூடியதாக இருக்கும் என்று எனதும், என் போன்ற சில சக ஆசியர்களின் கருத்து என்பதை அறித்தருகின்றேன்.

இப்படியான ஒன்றுகூடல் நிகழ்வுகளை தவணைக்கொரு தடவையாவது இளம் ஆசியர்களையும் சேர்த்து அழைத்து கத்தோலிக்க திருமறையின் விசுவாசத்தை உயிரூட்ட அருட்பணி. உதயதாஸ் அடிகளார் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கின்றேன்

## 02ம் பக்கம் — திரு இருதய சபை

இதனடிப்படையில் வடகொழும்பு தமிழ் திரு இருதய சபையின் இயக்குனர் அருட்பணி மர்சலியார் அடிகளார், அருட்பணி. ஆனந்தன் பொன்னான்டோபுள்ளே அடிகளார் மற்றும் அருட்பணி. பிரிட்டோ அலோசியஸ் அடிகளார் ஆகியோரால், முகத்துவாரம், புனித டிலாசால் சிற்றாலயத்தில் 18.10.2013 ஆண்டு காலை 8.00 மணிக்கு அங்குரார்ப்பண வைபவத்தோடு, திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, ஸ்தாபனம் செய்து வைக்கப்பட்டது.

திரு இருதய சபையின் முக்கிய இறைபணியாக தற்போதைய எமது பங்கின் உதவி பங்கு தந்தையின் வழிகாட்டலின் கீழ் இல்லங்களில் கிறிஸ்து அரசை நிறுவும் பணியை ஆரம்பித்து அதன் அனைத்து உறுப்பினர்களும் பக்தியுடன் தொண்டாற்றிக் கொண்டிருக்கின்றனர் என்பது சிறப்பாக குறிப்பிடத்தக்கதாகும்.

**திரு இருதய சபையினர்**

> அளவிட முடியாத துன்பங்களால் வேதனைப்படும் ஆஷ்ஷிஸ் கதறுகிறது. மற்றும் மக்கள் மத்தியில் ஒருவரை ஒருவர் மதித்தல் அமைதி, சந்திப்பு, ஆகியவற்றைக் கொண்ட வருங்காலத்துக்காக அது கெஞ்சுகின்றது.
>
> **திருத்தந்தை பிரான்சிஸ்**

## 04ம் பக்கம் — திருப்பாலத்துவ சபை...

வளர்ந்தோருக்கு இறைவனையும், அவரது அரசையும் சுட்டிகாட்டும் அடையாளங்கள் சிறுவர்கள் என்ற உண்மையை இயேசு இந்த இடத்தில் தெரியப்படுத்தியுள்ளார். சிறுவர்கள் விண்ணரசிற்குரியவர்கள் என்பதையும் விண்ணரசு சிறுவர்களுக்குரியது என்பதையும் இயேசு உறுதியாக காட்டியுள்ளார். (மாற் 9:33-37)

இயேசு ஒரு தடவை தனது சீடர்களின் நடத்தையை கண்டு அதிதிருப்தி அடைந்தார். "சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள் தடுக்க வேண்டாம் ..... "(மாற் 10:14) இயேசு சிறுவர்கள் மட்டில் தமது அளவுக்கதிகமாக அரவணைப்பை வெளிப்படுத்தினார். தம்மிடம் அவர்களை அழைத்து அவர்கள் மீது தம் கைகளை வைத்து ஆசீர்வதித்து சிறுவர்களுடைய சிறப்பினை நமக்கு நினைவுபடுத்துகின்றன. இந்த சின்னஞ்சிறு உள்ளங்களை ஏற்றுக் கொள்பவர் இயேசுவையே ஏற்றுக் கொள்கின்றார். (மத் 18:5)

இயேசுவின் பார்வையில் சிறுவர்கள் விண்ணரசை தங்குதடையின்றி ஏற்றுக் கொள்ளக் கூடியவர்கள் அவர்கள் இறை வெளிப்பாட்டை திறந்த மனத்துடன் அரவணைத்துக் கொள்பவர்கள் ஆவர். உள்ளத்தில் "தான்" எனும் எண்ணம் அற்றவர்கள். "அருள்" என்பது இறைவனின் கொடை, இதனை எவருமே தனது திறமையினால் அடைய முடியாது.

சிறுவர்கள் எதனையும் தங்கள் திறமையின் நிமித்தம் பெற்றுக் கொள்பவர் அல்ல மாறாக அது அவர்களுக்கு வழங்கப்படுகின்றது. அவர்கள் இயல்பாகவே தமது பெறிறோரிலும், ஏனையவர்களிலும் நம்பிக்கை கொண்டு வாழ்பவர்கள். இவ்வாறாக இறைவன் மீது நம்பிக்கையும், எதிலும் அவரை சார்ந்திருக்கும் பண்பு தானே விண்ணரசுக்கு ஒருவரை கொண்டு செல்லும் இந்தப் பண்புகளை தன்னகத்தே கொண்டிருப்பவர் சிறுவர்கள். அவர்கள் தமது சிந்தனை, சொல், செயல் அனைத்திலும் கடமமற்றவர்கள். எனவேதான் விண்ணரசு அவர்களது உரிமை என இயேசு உறுதியாக எடுத்துரைத்தார். இச்சிறுமலர்கள் உலகை அலங்கரிக்கும் சிறந்த மலர்களாக உருவாக்க வேண்டியது திருச்சபையின் பாரிய பணியாகும்.

## 08ம் பக்கம் — நாம் உலகை அலங்கரிக்கும்

சின்னஞ் சிறுவர்களை இயேசுவிடம் வழிநடத்திச் செல்வதென்பது நம் தலையான அப்போஸ்தலிக்க பணியும் கடமையுமாகும் என நாம் அனைவரும் உணர்ந்திடுவோம். "சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள். இவர்களை தடுக்க வேண்டாம்" என மொழிந்த நம் தலைவர் இயேசுவின் வார்த்தைகளை எப்போதும் நாம் நினைவில் கொள்வோமாக. அநேகமாக நாம் பெரிதாக செல்வாக்கு செலுத்தக்கூடிய மக்களுடனையே பெரிய காரியங்களில் ஈடுபடுகின்றோம். ஆனால் அப்போது, அலகையினதும் அவனது நண்பர்களினதும் தாக்குதலால் பிழையாக வழிநடத்தப்பட்டு தீமையை நோக்கி இழுத்துச் செல்லப்படக்கூடிய ஆபத்தை எதிர்நோக்கும் நமது சிறுவர்களை காப்பாற்ற நமது முழு கவனத்தையும் அவர்கள் பால் செலுத்துவோமாக. கைவிடப்பட்ட, பிழையாக வழிநடத்தப்பட்ட சிறுவர்களை குறித்து நம்மிடம் ஆண்டவர் கேள்வி எழுப்பும் போது, "நான் என்ன எனது சகோதரனின் காவலாளியா?" என கூறிய காயீனின் பதில் போல் நமது பதில் அமைவுறா இருக்க வேண்டும். இந்த எல்லா சிறார்களும் "என்னுடையவர்கள்" அல்லது "எம்முடையவர்கள்" என கருதுவதுடன் அதன்படி செயலாற்றுவோமாக.

இந்த வருட திருப்பாலத்துவ சபை ஞாயிறு தினத்திற்கான கருப்பொருளினக் செய்தியை பாத்திரமாக உள்வாங்கிக் கொள்வோம். நாம் அனைவரும் இந்த உலகை பிரகாசிக்கச் செய்து மானிட வாழ்வுக்கு ஏற்ற ஒரு பிறந்த இடமாக ஏற்படுத்த உழைக்க வேண்டும் என்பதை மனதில் இருத்துவோம். நமது பிள்ளைகளும் கூட இதே மனநிலையில் தமது இளம் பிராயத்திலிருந்து செயற்பட அவர்களை ஊக்கப்படுத்துவோமாக. இது அவர்களுடைய கடமையும் பொறுப்புணர்வுமாகும் என்பதை அவர்கள் முற்றுமுழுதாக உணர்ந்து நம்பி அதை அடைவதற்கான வல்லமையை அவர்கள் கொண்டுள்ளார்கள் என்பதை அறியச் செய்ய நாம் வலியுறுத்துவோமாக. இந்த இலக்கினை அடைய அவர்கள் செய்யக்கூடிய சிறிய செயற்பாடுகளை அவர்களுக்கு நாம் கற்பித்து கொடுப்போமாக. இறைவார்த்தைகளினால் அவர்களுக்கு ஊட்டம் கொடுப்பதும் எமக்கான கடமையே. அப்போதுதான் அவர்களால் சாத்தானின் சதிவலையினை வெற்றி கொள்ள முடியும். இதனை நாம் செய்தோமெனில், நல்ல தேவன் நம்மைக் குறித்து பூரிப்படைந்து நம்மை அபரிமிதமாக ஆசீர்வதிப்பார்.

ஆண்டவரின் தோட்டமாகிய உலகினை அலங்கரிக்கும் பூக்கள் சின்னஞ் சிறார்களாகும். கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக! அன்னை மரியா உங்களை பாதுகாப்பாராக!

## 10ம் பக்கம் — பிள்ளைகள்...

8. ஒவ்வொரு பிள்ளையும் தன் கருத்தை வெளியிடுவதற்கும் தன்னைப் பாதிக்கக் கூடிய எந்த விடயம் அல்லது நடைமுறை பற்றி அதன் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவும் உரிமையுடையதாகும். அத்துடன் வளர்ந்தோரால் அது கருத்திற் கொள்ளப்படுதற்கும் உரிமையுடையதாகும்.

9. பிறரின் உரிமைகளை மீறினாலல்லாமல் மற்றும்படி தகவல்களைப் பெறவும் மற்றவர்களுக்கு இவற்றைப் பரிமாறவும் தன் கருத்துக்களை வெளியிடவும் பிள்ளைக்கு உரிமையுண்டு.

10. ஒவ்வொரு பிள்ளையும் பெற்றோரின் வழிநடத்தலுக்கும் தேசிய சட்டத்திற்கும் அமைந்த முறையில் சிந்தனை, மனசாட்சி, சமயம் ஆகிய விடயங்களில் சுதந்திரமாக இயங்க உரிமையுடையவராவர்.

11. பிள்ளைகள் மற்றவர்களை சந்திக்க, கூட அல்லது சங்கங்களை அமைக்க உரிமையுடையவர்கள். ஆனால் இது பிறரின் உரிமைகளுக்குப் பாதகமாய் அமைதலாகாது.

12. பிள்ளைகள் தங்களது அந்தரங்கத்தைப் பேண உரிமையுடையவர்கள். தமது அந்தரங்கம், குடும்பம், வீடு, குடித் தொடர் ஆகியவற்றுக்குப் பாதுகாப்புப் பெறும் உரிமை அவர்களுக்கு உண்டு.

13. தம் பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோர் இருவருக்கும் கூட்டாகப் பொறுப்பேற்றல் வேண்டும். பெற்றோர் இதனை நிறைவேற்றுவதற்கு அரசு ஆதரவளித்தல் வேண்டும்.

14. பிள்ளைகள் சகல வகையான இம்சைகள், புறக்கணிப்பு ஆகியவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமையுடையவர்களாவர். பெற்றோரும் ஏனைய பராமரிப்பாளர்களும் பிள்ளைகளைத் துன்புறுத்தும் உரிமையற்றவர்களாவர். பிள்ளைகள் இம்சைகள், புறக்கணிப்பு ஆகியவற்றிற்கு உள்ளாகாது தடுக்கவும் அவற்றிலிருந்து மீளவும் வகை செய்யும் செயற்திட்டங்களைப் பொறுப்பேற்கும்....

15. ஒரு பிள்ளையைத் தத்தெடுப்பதனால் அதனைச் சட்டமுறைப்படியும் பிள்ளையின் சிறந்த நலனுக்கு அமைவாகவும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

16. ஒரு பிள்ளை பாதுகாப்பு இல்லை என்னும் காரணத்தினால் தன் வீட்டை அல்லது நாட்டைப் பிரிந்து அகதியானால் அப்பிள்ளை விசேட பாதுகாப்பும் ஆதரவும் பெறும் உரிமையுடையதாகும்.

## வாழ்த்துகின்றோம்



**திரு திருமதி டேவிட், ரீட்டா அத்தானாசியா**

வெள்ளவத்தைப் பங்கைச் சேர்ந்த S.B. டேவிட் அவர்கள் தமது திருமண பந்தத்தின் 50ஆம் ஆண்டுவிழாவை இம்மாதம் 06.02.2015 அன்று கொண்டாடுகிறார்கள். இவர்களின் இல்லரவாழ்வுக்கு இறைவன் செய்த சகல நன்மைகளுக்கும் நன்றி கூறுவதோடு இனி-வரும் காலத்தில் உடல், உள சுகத்தோடு வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

## மணமகள் தேவை



கொழும்பை பிறப்பிடமாகக் கொண்ட R.C மதம். 1976இல் பிறந்த 4' 9" உயரத்தை உடைய, தனியார் நிறுவனத்தில் தொழில் புரியும் மகனுக்கு, தாயார் சிவந்த 4' 9" உயரத்தை உடைய 1981க்கு மேல் பிறந்த வரனை எதிர்பார்க்கின்றார். தொடர்புகொள்ளவும்
011 - 2055932
071 - 8818845
075 - 6816231
(N 5590)

## மணமகன் தேவை



கத்தோலிக்க தமிழ் 27 வயதுடைய 5'3" உயரமுள்ள அரச பாடசாலையில் ஆங்கில ஆசிரியைக்கு பெற்றோர் தொழில் உள்ள வரனை எதிர்பார்க்கின்றனர். தொடர்புகளுக்கு
031 - 2273359
(N 5747)

# ஹினிதும தவக்கால யாத்திரை செல்வோம் வாரீர் – 2015

# 66ஆவது யாத்திரை கால ஒழுங்குகள்



**தலைப்பு : "உங்களை கழுவிச் சுத்திகரியுங்கள், தீமை செய்தலை ஒழியுங்கள்" (எசாயா 1:16)**

மாசி 15 : ஞாயிறு காலை 8.00 மணிக்கு கல்வாரி மலையடியின் கீழ் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சிறிய சிலுவைப்பாதை மலையின் 14 நிலைகளையும் ஆசீர்வதித்து, அத்திருப்பலிப்பீடத்தின் மீது முதலாவது திருப்பலியை ஒப்புக்கொடுத்தல். காலி மறைமாவட்ட ஆயர் மேதகு ரேமன் விக்கிரமசிங்க ஆண்டகையின் தலைமையின் கீழ் நடைபெறும்.

மாசி 18 : விபூதிப் புதன் - மாலை 5.00 மணிக்குத் திருப்பலி.

## தவக்கால வழிபாடுகள்

- திங்கள் முதல் புதன் வரை திருப்பலி காலை 7.00 மணிக்கு
- உங்கள் வரவிற்கேற்றபடி பொது சிலுவைப்பாதையை ஆயத்தப்படுத்திக்கொள்ளலாம்.

## யாத்திரைக்கால ஒழுங்குகள்

### வியாழக்கிழமைகளில்

✠ மாலை 3.00 மணிக்குப் பொதுச் சிலுவைப்பாதையுடன் 12 ஆம் நிலையில் திருப்பலி

✠ இரவு 7.00 மணிக்குத் திருமணித்தியாலமும், திவ்விய நற்கருணை வழிபாடும்.

### வெள்ளிக்கிழமைகளிலும் சனிக்கிழமைகளிலும்

✠ காலை 6.00 மணிக்கு ஆலயத்தில் திருப்பலி

✠ காலை 7.00 மணிக்குப் பொதுச் சிலுவைப்பாதையுடன் 12 ஆம் நிலையில் - **திருப்பலி – தமிழ்**

✠ காலை 7.30 மணிக்குப் பொதுச் சிலுவைப்பாதையுடன் 12 ஆம் நிலையில் - **திருப்பலி – சிங்களம்**

✠ காலை 10.00 மணிக்குப் பொதுச் சிலுவைப் பாதை

✠ நண்பகல் 12.00 மணிக்கு ஆலயத்தில் திருப்பலி

✠ மாலை 3.00 மணிக்குப் பொதுச் சிலுவைப்பாதையுடன் 12 ஆம் நிலையில் திருப்பலி

✠ இரவு 7.00 மணிக்குத் திருமணித்தியாலமும் திவ்விய நற்கருணை வழிபாடும். - **சிங்களம்**

✠ இரவு 8.00 மணிக்குத் திருமணித்தியாலமும், திவ்விய நற்கருணை வழிபாடும். **– தமிழ்**

### புதிதாக...

✠ கல்வாரி மலையடிவாரதத்தின் கீழ் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சிறிய சிலுவைபாதை மலையில் மேல்நோக்கி பயணிக்க முடியாதவர்களுக்காக திருப்பலியை தயார்படுத்திக் கொள்ளலாம்.

### ஞாயிறுகளில்

★ காலை 6.00 மணிக்குத் திருப்பலி

★ காலை 8.00 மணிக்குத் திருப்பலி

★ பி.ப. 12.00 மணிக்குத் திருப்பலி

★ காலை 7.00 மணிக்கு திருப்பலி - தமிழ்

★ காலை 10.00 மணிக்கு பொதுச்சிலுவைப்பாதை

## புனித வாரத்தில்...

**பங்குனி 29 : குருத்தோலை ஞாயிறு –** காலை 7.30 மணிக்குத் திருப்பலி
காலி மறைமாவட்ட ஆயர் மேதகு றேமன் விக்கிரமசிங்க ஆண்டகையின் தலைமையில் நடைபெறும்.

**சித்திரை 02 : பெரிய வியாழன் –** மாலை 5.00 மணிக்கு வழிபாடு
அருட்தந்தை லியோ மேரில் பீரிஸ் அடிகளாரின் தலைமையின் கீழ் நடைபெறும்.

**சித்திரை 03 : பெரிய வெள்ளி –**

(1). பி.ப. 2.00 மணிக்குப் பொதுச் சிலுவைப்பாதை காலி மறை மாவட்ட பொருளாளரும் கலேகான சிறுவர் குருமடத்தின் இயக்குனருமான அருட்தந்தை. சம்பத் விலேகொட அடிகளாரின் தலைமையில் நடாத்தப்படும்.

(11). பி.ப. 3.00 மணிக்கு திருப்பாடுகளில் ஆராதனை (கல்வாரித் திருத்தலத்தில்) காலி மறைமாவட்ட ஆயர் மேதகு ரேமன் விக்கிரமசிங்க ஆண்டகையின் தலைமையின் கீழ் நடைபெறும்.

**சித்திரை 04 : அல்லேலூயா சனிக்கிழமை –** இரவு 10.00 மணிக்குத் திருப்பலி காலி மறைமாவட்டத்தின் ஆயரின் பொருளாளர் அருட்தந்தை லசந்த பொன்சேகா அடிகளாரின் தலைமையில் கீழ் நடைபெறும்.

**சித்திரை 05 : உயிர்த்த ஞாயிறு –** காலை 8.00 மணிக்குத் திருப்பலி

**சித்திரை 12 – ஞாயிற்றுக்கிழமை யாத்திரைக் காலத்தின் இறுதிநாள் – காலை 8.00 மணிக்கு நன்றித் திருப்பலி**

## திருத்தலத்தை வந்தடையும் பாதைகள்

கொழும்பு → கொட்டாவ → தென் இலங்கை கடுகதி நெடுஞ்சாலை → பின்னதுவ → உடுகம → ஹினிதும.

கொழும்பு → காலி → உடுகம → ஹினிதும.

கொழும்பு → காலி → வதுரபுர → உடுகம → ஹினிதும.

கொழும்பு → ஹிக்கடுவ → ஹல்பாத்தோட்டை → நாகொடை → உடுகம → ஹினிதும.

கொழும்பு → பெந்தோட்டை → அல்பிடிய → தல்கஸ்வல → மாப்பலகம → உடுகம.

கொழும்பு → தென் இலங்கை கடுகதி நெடுஞ்சாலை → குருந்துகஹஹதக்ம → பிட்டிகல → தல்கஸ்வல → மாப்பலகம → உடுகம → ஹினிதும.

கொழும்பு → களுத்துரை → மத்துகம → பெலவத்த →
- பிட்டிகல → தல்கஸ்வல → மாப்பலகம → உடுகம → ஹினிதும.
- நெலுவ → தவலம → ஹினிதும.
- பிட்டிகல → ஹபரகட → ஹினிதும.

மாத்தரை → அக்குரஸ்ஸ → மல்புதனெல்ல → தவலம → ஹினிதும.

இரத்தினபுரி → பெல்மடுல்ல → இறக்குவானை → தெனியாய → மல்புதனெல்ல → தவலம → ஹினிதும.

## சிறப்பு ஆராதனைகள்...

மாசி 28, பங்குனி 01 : யாத்திரைக் காலத்தின் 2 ஆம் வாரம் தமிழ் பக்தர்களுக்கான விசேட தினங்கள் கிரேன்பாஸ் சங்க திருமணித்தியாலம், திவ்விய நற்கருணை வழிபாடும் நடைபெறும்.

பங்குனி 02-03 : காலி மறை மாவட்ட இளைஞர் யுவதிகளுக்கான ஞான ஒடுக்கமும் திருப்பலியும்.

பங்குனி 07-08 : வெல்ல வீதி பங்கு தந்தை அருட்தந்தை டெரன்ஸ் போதியாபதுகே அடிகளாரின் தலைமையில் சிலுவைப் பாதை, திருமணித்தியாலம், திவ்விய நற்கருணை வழிபாடும் நடைபெறும்.

பங்குனி 14-15 : தவக்காலத்தின் சனிக்கிழமைகளில் திருப்பலி - தமிழ்மொழியில் புனித அந்தோனியார் இளைஞர்களுக்காக நடாத்தப்படும்

பங்குனி 21 : காலி மறைமாவட்ட அருட் சகோதரிகளுக்கான தியானம் நடைபெறும்.

## உங்கள் கவனத்திற்கு

இத் திருத்தலம் ஆண்டவரின் திருப்பாடுகள் மற்றும் உயிர்ப்பை எமக்கு நினைவூட்டுவதனால்...

தயவு செய்து -

★ திருத்தலத்தின்போது ஒப்புரவு அருட்சாதனத்தை பெற்றுக்கொள்ளவும்.

★ யாத்திரைக் காலத்தின் இறுதி நாட்களில் ஏற்படும் சனநெரிசலைத் தவிர்த்துக் கொள்ள முதல் வாரங்களில் யாத்திரை மேற்கொள்ளவும்.

★ திருத்தலத்திற்கு மதுபானம், சங்கீத மற்றும் விளையாட்டுப் உபகரணங்கள் போன்றவற்றைக் கொண்டுவருவதை தவிர்க்கவும்.

★ கிறிஸ்தவரல்லாதோர் பெரும்பான்மையாக வாழும் இக்கிராமத்தில் அமைந்துள்ள இத்திருத்தலத்தின் புனிதத்துவம் கெடாத வகையில், முன்மாதிரிகையான விதத்தில் நடந்து கொள்ளவும்.

★ உங்கள் தங்குமிட வசதிகளுக்கு மாலை 6.00 மணிக்கு முன்னராக வந்து அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளவும்.

**தொலைபேசி இல : 091 – 3912285, 077-7146858**

★ குளிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தை மட்டுமே பயன்படுத்துக. குளிப்பதற்காக தண்ணீர்த் தாங்கி, ஷவர் தயார்படுத்தி உள்ளது. அதனால் வேறு இடங்களில் குளிக்காதீர்கள்.

★ நீர் குழாய்களில் வரும் தண்ணிரை குடிப்பதற்கும், சுகாதார வசதிகளுக்கு மட்டுமே பயன்படுத்தவும்.

★ கல்வாரி மலையடியின் கீழ் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சிறிய புனித ஸ்தலத்தல் நடைபெறும் திருப்பலியில், மேல் நோக்கி செல்ல முடியாதவர்களுக்கு இத்திருப்பலிகளில் கலந்து கொள்ளலாம்.

ஆண்டவர் அருள் பெற அனைவரும் வருக!

**கல்வாரித் திருத்தலம்,**
அருட் திரு. இரணத் இந்திக என்டனி அடிகளார்,
ஹினிதும :
திருத்தலப் பரிபாலகர்.
தொலைபேசி : 091 - 3912285, 077 -7148856
E-mail : fr.indika@gmail.com
Website: www.hinidumashrine.gallediocese.org

**தவக்காலத்தின் மட்டுமல்லாது வருட முழுவதும் ஹினிதும கல்வாரித் திருத்தலம் யாத்திரிகளுக்கு திறந்திருக்கும் என மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.**

(Q 13N7709)